
# இந்து கலாசாரம்

## இந்து சமய திங்கள் வெளியீடு

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலேச் சபை,
பதிவு இல. 73
10. 5 1950
அறக்கட்டளை நிலயம்,
கசெட் இல: 14805
7. 6. 1968





## இரண்டாவது ஆண்டு நிறைவு மலர்

*Heartiest Felicitations from*

# OCEAN TRADES

( House of Fishing Gear )

**S-4 Ist Floor Colombo Central Super Market Complex**

**Colombo - 11.**

**TELEPHONE 20718**

IMPORTERS AND DISTRIBUTORS OF NYLON AND KURALON FISHING NETS, ROPES AND TWINES FISHING HOOKS AND MONOLINES AND ALL OTHER FISHING EQUIPMENT INCLUDING COMPASSES NGK SPARK PLUGS AND YANMAR SPARE PARTS.

**BRANCHES**

**240: Bankshall Street,**
**Colombo 11.**
**Phone - 422963**

**S-45 2nd Floor**
**Colombo Central**
**Super Market Complex**
**Colombo 11.**
**Phone - 422963 - 20718**

**76, Hospital Road,**
**Jaffna**
**Phone - 22122**

# MALBA ROPES (PVT) LTD.

MANUFACTURERS OF POLYETHYLENE & POLYPROPYLENE ROPES VINYLON NYLON AND OTHER SYNTHETIC ROPES & TWINES

**Head Office :**
**S-4, 1st Floor,**
**Colombo Central Super Market Complex**
**170, Reclamation Road,**
**Colombo - 11.**
**Phone : 23906**

**Factory:**
**15 A, Temple Road,**
**Ekala**
**Ja-Ela.**
**Phone : 536894**

230
இந்து
54PK

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலைச் சாலை,
பதிவு இல. 73
10. 5. 1950
அறக்கட்டளை நிலையம்,
கசெட் இல. 14805
7. 6. 1968

# சமர்ப்பணம்



11 088

சாத்திரங்கள் பேசும் சளக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்
பாத்திரம் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்கு ளருளும் மாற்பேறரே.



# இந்து கலாசாரம்

## இந்து சமய திங்கள் இதழ்

## இரண்டாவது ஆண்டு நிறைவு மலர்

இடம்: சைவ முன்னேற்றச் சங்கம்
நால்வர் மணி மண்டபம்
கொம்பனித்தெரு

காலம்: 25-8-1991 ஞாயிறு மாலை 5-00 மணி

தலைமை: திரு. ஆர். வைத்தமாநிதி
(இந்து கலாசார மன்றத் தலைவர்)

பிரதம அதிதி: மாண்புமிகு பி. பி. தேவராஜ் அவர்கள்
(இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர்)

சிறப்பு அதிதிகள்: திரு. ஆர். விஜயபாலன்
(வர்த்தகப் பிரமுகர்)

திரு. வி. ரி. வி. தெய்வநாயகம் பிள்ளை
(அறங்காவலர், ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோயில்)

திரு. ரி. செந்தில்வேள்
(அறங்காவலர், பேலியகொட ஸ்ரீ பூபால விநாயகர் கோயில்)

திரு. தெ. ஈஸ்வரன் ஜே.பி.
(இந்திய சமுதாயப் பேரவை உபதலைவர்)

திரு. வி. பாலசுப்ரமணியம்
(இந்து மாமன்றத் தலைவர்)

திரு. எஸ். தனபாலா ஜே.பி.
(சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர்)

திரு. ஆர். சிவகுருநாதன்
(பிரதம ஆசிரியர், தினகரன்)

திரு. இராஜ புவனேஸ்வரன் ஜே.பி.
(விவேகானந்த சபை பொதுச் செயலாளர்)

வெளியீட்டுக்குழு
இந்து கலாசார மன்றம்
கொழும்பு 3.

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஆசி



இலங்கையில் வசிக்கும் இந்துக்களின் சைவம் முதலிய பல்வேறு சமய நெறி முறைகளையும் அபிலாஷைகளையும் வெளியிட்டு வரும் இந்துகலாசாரம் என்னும் இந்து சமய திங்கள் இதழ் ஈராண்டு பூர்த்தியடைவதை முன்னிட்டு சிறப்பிதழை வெளியிட இதன் நிர்வாகிகள் முன்வந்திருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

இந்த இதழ் இந்து கலாசார சம்பந்தமான விஷயங்களை வெளியிட்டுகொண்டு மென்மேலும் வளர்ச்சியடையும் படி ஆசீர்வதிக்கிறோம்.

**ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்**

# ஸ்ரீலஸ்ரீ குருமஹா சந்நிதானத்தின் ஆசி



பேரன்புக்குரிய ஆசிரியர் ஏ. எம். துரைசாமி அவர்கட்கு எமது உளங் கனிந்த நல்லாசிகள்.

இந்து கலாசாரம் இரண்டாண்டைக் கடந்த குழந்தையாக மதிப்போடும், சிறப்போடும் வளர்ந்து வருவது கண்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். இக்கால கட்டத்தில் சைவ மக்கள் உள்ளங்களில் இறைபக்தி, இறையுணர்வு, இறை நம்பிக்கை ஆதியன வளர இன்னோரன்ன சஞ்சிகைகள் துணை நிற்பன சந்தேகமில்லை. மனவமைதி வேண்டி நாம் ஆற்றக்கூடியன சித்தசுத்தியும் அசைக்க முடியாத இறைவழிபாடுமேயாகும்.

இந்து கலாசாரம் மென்மேலும் வளர்ந்தோங்கத் துணைபுரியும் அன்பர்கள் அனைவரையும் பாராட்டி, யாமும் அவ்வகையில் இறையருளை உளமார வேண்டி எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு,

**ஸ்ரீலஸ்ரீ குருமஹாசந்நிதானம்**
நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம்
யாழ்ப்பாணம்.



# திருமுருக கிருபானந்த வாரியாரின்வாழ்த்துப்பா

107, சிங்கண்ண செட்டித் தெரு,
சிந்தாரிப்பேட்டை,
சென்னை 2.

வாழி அறநெறிகள் வாழி அருள் மன்றம்
ஏழிசைபோல் யாழிசைபோல் எந்நாளும் — வாழியவே
தெய்வத் திருவருளால் செய்யதிருத் தொண்டியற்றி
வையமதில் வாழ்க மகிழ்ந்து.

ஏரார் இலங்கைநகர் இந்து கலாசாரம்
பாரார் புகழ்கின்ற பண்புடனே — நீராரும்
சென்னியுடையான் திருவருளால் பல்லாண்டு
இந்நிலத்தில் வாழ்க இனிது

# ஸ்ரீ சுவாமி ஆத்மகனாநந்தாவின் வாழ்த்துரை

இந்து மதம் மிகத் தொன்மையானது. அழிவற்ற ஆன்மீகக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு என்றும் வாழ்வது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்', 'மதங்கள் எத்தனை வழிகள் அத்தனை' போன்ற பரந்த சிந்தனைகளை உள்ளடக்கி, ஆன்மநேய ஒருமைப்பாட்டை காலங்காலமாக போதித்து வருவது. இன்றைக்கு மனித சமுதாயம் இத்தகைய கருத்துக்களை மிகவும் எதிர்நோக்கியுள்ளது. இத்தேவையைப் பூர்த்தி செய்யும் உயர்ந்த பணியில் ஈடுபட்டுள்ள உங்களைப் பாராட்டுகிறேன்

இரண்டாண்டுகளைச் சிறப்பான முறையில் நிறைவு செய்து மூன்றாமாண்டில் அடியெடுத்து வைக்கும் உங்கள் 'இந்து கலாசாரம்' இதழுக்கு எனது நல்வாழ்த்துக்கள்.



சுவாமி ஆத்மகனாநந்தா

# சுவாமி கெங்காதரானந்தாஜியின் திருவருள் உண்டு!



சுவாமி ஜெகதீஸ்வரானந்தா
சிவயோக சமாஜம்
மெயின் வீதி
திருகோணமலை.

இந்துமதத்தை மதம் என்று சொல்வதைவிட இந்துதர்மம் என்பதே பொருத்தமானது. என்றும் நிலைத்திருக்கின்ற தர்மம் என்பதனால் அது சனாதன தர்மம் எனப்படுகின்றது.

இன்றைய உலகில், மனிதர்கள் போதிய ஆத்மீக அறிவில்லாமையினாலேயே, ஒழுக்கம் கட்டுப்பாடு என்பவற்றை இழந்து வாடுகிறார்கள். நாகரிகமற்று மிருகக்குணங்களை வளர்த்துக்கொண்டு மீள முடியாத துன்பத்துக்குத் தங்களை அடிமைகளாக்கி அல்லல்படுகின்றார்கள்.

இறைவன் இத்தகைய மனிதகுலத்தை கடைத்தேற்றுவதற்காக காலத்துக்குக்காலம், பரிணாம வளர்ச்சியின் உச்சநிலை அடைந்த மேன்ஞானிகள்மூலம், சனாதன தர்மத்தையும் நிலையான தத்துவங்களையும் உணர்த்தி அருளுகின்றான்.

இந்த உண்மைகளின் அடிப்படையிலே வாழுகின்றபோது துன்பங்களிலிருந்து விடுதலை பெற்றுநிலையான சுகத்தை மனிதன் அனுபவிக்க முடியுமென இறைவன் அருள்பாலிக்கின்றான். இக்கருத்துகள் எமது குருதேவராகிய அருள்ஞானி சுவாமி கெங்காதரானந்தாஜி அவர்களின் செய்தி சிந்தனைகளின் பிரதிபலிப்புகளாகும்.

இந்த சனாதன தர்மத்தில் புதைந்து கிடக்கும்விலைமதிப்பற்ற உண்மைகளை சமுதாயத்தின் மத்தியிலே பரப்பி ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்மூலம் ஆன்ம சுகத்தையும் நிலையான இன்பத்தையும் பெற கருவியாக இருக்கும் "இந்து கலாசாரம்" தனது இரண்டு ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவுசெய்து பிரகாசமான மூன்றாவது ஆண்டில் அடிவைத்திருப்பது கண்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். இந்து கலாசார வெளியீடு மென்மேலும் சமுதாயத்துக்கு வழிகாட்டியாக இருந்து ஆத்மீக எழுச்சியை ஏற்படுத்த எமது குருதேவராகிய சுவாமி கெங்காதரானந்தாஜியின் திருவருளும் பரமேஸ்வரனின் அருட்கடாட்சமும் என்றும் இருப்பதாக.


இந்துகலாசார வெளியீட்டை அதிசிரத்தையுடன் வெளியிட்டுவரும் அதன் காரணகர்த்தாவாகிய ஆசிரியருக்கும் அவரது உதவியாளர்களுக்கும் எமது நல்லாசிகள்.

# காயத்ரிசித்தர் முருகேசு சுவாமிகளின் ஆசிச் செய்தி

"இந்து கலாசாரம்" இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி சிறப்பு மலர் வெளியிடுவது கண்டு அகமகிழ்ச்சி அடைகிறேன் இந்து கலாசாரம் இலங்கையில் மட்டுமல்லாமல் மேலை நாடுகளிலும் தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்து வருவது பாராட்டுக்குரியது

"இந்து கலாசாரம் என்ற மாத இதழ் மூலம் ஆன்மீகம், கலாசாரம் மற்றும் சிறப்பு அம்சங்களை உள்ளடக்கி, அகிலம் வாழ் தமிழ் மக்கள் நலன்பெற, பல சிரமங்களுக்கு மத்தியில் மேற்படி பத்திரிகை நடத்தும் சேவை விருப்பம் கொண்ட அனைவருக்கும் அவர்களின் உயர்ந்த சேவை சிறந்த நிலையில் சிறப்புப் பெற்று பிரகாசிக்க அன்னை காயத்ரி தேவியை பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி!



காயத்திரிசித்தர்

ஸ்ரீ ஆர். கே. முருகேசு சுவாமிகள்

# இலண்டன் மெய்கண்டார் ஆதீனம் வாழ்த்து !

சிவத்திரு நிறைந்த ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம் ஓம் நமசிவாய!

இந்து கலாசாரம் இதழ்கள் தவறாமல் கிடைக்கின்றன. மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம். உங்களது சீரிய இந்து கலாசாரத் தொண்டு இன்றைய சூழ்நிலையில் மிக மிக முக்கியம்.

உங்களது சேவையைப் போற்றிப் பாராட்டுகின்றோம்.

வாழ்க! வளர்க! வெல்க!

அன்பே சிவம்

தவத்திரு சிவநந்தி அடிகளார்

# சிவதர்ம வள்ளலாரின் வாழ்த்து!

அன்புடையீர்,

''இந்து கலாசாரம்'' தனது இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்தமை கண்டு பெருமகிழ்வு கொள்கின்றோம்.

தமது மூன்றாவது ஆண்டிலேதான் வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க பூத பரம்பரை பொலியத் தன் புனிதவாய் மலர்த்தித் தன் உள்ளங் கவர் கள்வனைத் தகப்பனாருக்குக் காட்டினார் திருஞானசம்பந்தர். இதேபோல 'இந்து கலாசாரம்' தன் மூன்றாவது ஆண்டிலே முதிர்ச்சியடைந்து அற்புத சாதனைகளை சாதித்திடும் என நம்புகிறோம். அந்த நன்னாளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். தங்கள் இதழுக்கு இந்துக்கள் மத்தியில் பேராதரவு கிடைக்க இறையருள் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு

சமயப்பணியில்

க. கனகராசா

# இந்து சமய கலாசார அமைச்சர்

# மாண்புமிகு திரு பி. பி. தேவராஜ் அவர்களின்

# ஆசிச் செய்தி



கடந்த இரண்டாண்டுகளாக கொழும்பிலிருந்து வெளி வரும் இந்து சமயத் திங்கள் ஏடான 'இந்து கலாசாரம்' தனது மூன்றாவது ஆண்டிலே அடியெடுத்து வைப்பது கண்டு பெருமகிழ்வு கொள்கின்றேன்.

மிகவும் சிரமம் நிறைந்த பணியான பத்திரிகை நடாத்தும் பணியை, அதுவும் ஒரு சமய இதழைத் தவறாது வெளியிடும் உயரிய கடமையை, கொழும்பு இந்துகலாசார மன்றத்தினர் சிறப்புற ஆற்றி வருகின்றார்கள்.

'இந்து கலாசாரம்' இதழ்களை நான் ஒவ்வொரு மாதமும் வாசிப்பதுண்டு. சமயச்செய்திகள், ஆன்மீக அருளாளர்களின் கட்டுரைகள், தமிழ்மொழியோடு தொடர்புடைய விடயங்கள் என சுவை மிகுந்த ஆக்கங்களை இவ்விதழ் வாசகர்களுக்கு தந்துள்ளது.

இரண்டாண்டுகளை நிறைவு செய்யும் இவ்விதழின் கடந்தகாலம் சிறந்தவொரு அடித்தளமாக அமைந்துள்ளது. தொடர்ந்தும் இவ்விதழ் தமிழுக்கும் சமயத்துக்கும் உன்னத பணி ஆற்றும் என்ற நம்பிக்கையை ஊட்டுகிறது.

இன்றைய நிலையில் எமது சமய நடவடிக்கைகள், சமூக வாழ்வுடன் இணைந்தவையாக அமைய வேண்டும். ஆலயங்கள் சமூகத்திற்கு படிப்பினைகளையும், வாழ்வியற் பண்புகளை தருவனவாதல் வேண்டும். ஆலயம் தொழுகிறோம் என்னும்போது எமது மனங்களில், புத்துணர்வும், தன்னம்பிக்கையும் துன்பங்களை வெல்கின்ற வலிமையும் கிடைக்க வேண்டும்.

இத்தகைய செய்திகளையும், கட்டுரைகளையும் தாங்கிய இதழாக இந்து கலாசாரம் வெளிவந்து, இந்து மக்களின் வாழ்வினை பயனுள்ளதாக ஆக்கவேண்டுமென்பது எனது பேரவா.

அந்த இலக்கு நோக்கிச் செயல்படுகின்ற பணிகளை இந்து கலாசாரம் ஆற்ற எனது மனமார்ந்த ஆசிகளை நல்குகின்றேன்.

பி. பி. தேவராஜ்
இந்து சமய, கலாசார இராஜாங்க
அமைச்சர்

# இந்துசமய கலாசார அமைச்சின் செயலாளர் வாழ்த்துகிறார்



திரு த. வாமதேவன்

(இந்து சமய கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர்)

இந்துசமயம் தனக்கென பாரம்பரியங்களையும் பண்பாடுகளையும் கொண்டு விளங்கும் சமயம். இதன் வளர்ச்சிக்காக அன்றுதொட்டு இன்றுவரை ஆதீனங்கள் தொடங்கி மடங்கள் வரை, அளப்பரிய தொண்டுகளைப் புரிந்துள்ளன. பல பத்திரிகைகள் காலத்துக்குக் காலம் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக்கொண்டு, தரமான சேவைகளை வழங்கிவருவது கண்கூடு இந்த வகையில் இந்து கலாசாரம்; இந்து சமய திங்கள் வெளியீடாக மாதமொருமுறை வெளிவந்து, இந்து சமயத்திற்கும், கலாசாரத்திற்கும் ஆற்றும் பணி அளவிடற்கரியது.

ஒவ்வொரு இதழும் புதுமணம் கமழ்ந்து வெளிவருவதைக் காணும்போது வெளியீட்டாளர்களின் நன்முயற்சியை பாராட்டாமல் இருக்க முடியாது. எல்லா அம்சங்களும் ஒருங்கே அமைந்து எல்லோர் மனதிலும் இடம் பிடித்துக்கொண்ட 'இந்து கலாசாரம்' என்றும் ஆல்போல் பரந்து அறுகுபோல் வேரூன்றி அறிவூட்ட வேண்டுமென்பதே எனதவா.

இரண்டாம் வருடம் பூர்த்தியாகி சிறப்பிதழ் வெளியிடப்படுவதையிட்டு நான் பெருமகிழ்வு அடைகின்றேன். இது மிகவும் பொருத்தமானதுங்கூட. எத்தகைய சூழ்நிலையிலும், மனம் தளராத சேவையாற்றி இந்து சமயத்துக்கும் மக்களுக்கும் நீண்டகால பணிசெய்ய இந்து கலாசாரம் முன்வரவேண்டும். இதற்கு எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை வேண்டி எனது நல்லாசிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

# பணிப்பாளர் வாழ்த்துகிறார்

சமய விழிப்புணர்ச்சிக்கு பத்திரிகைகளின் பங்கு மிகவும் முக்கியமானது. இந்த வகையில் இந்து சமய வளர்ச்சிக்கு ''இந்து கலாசாரம்'' பத்திரிகை ஆற்றிவரும் சேவை அளவிடற்கரியது. தேவைக்கேற்ற காலத்தில் பொருத்தமான செய்திகளுடன் வெளிவரும் இந்து கலாசாரம் சமய அறிவு விருத்திக்கான பல அம்சங்களையும் தாங்கி வருவது பாராட்டுக்குரியது.

இரண்டு ஆண்டுகளைப் பூர்த்திசெய்து நிறைவு விழா காணும் இவ்வேளையில் சிறப்பு மலர் வெளியிடுவது சாலப் பொருத்தமானது. சில பத்திரிகைகள் ஒரு சில இதழ்களுடன் தங்கள் சேவையை நிறுத்திக்கொள்ளும் இக்கால கட்டத்தில் பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் மனம் தளராது சேவையாற்றி வரும் இந்து கலாசார நிர்வாகிகளை இச் சந்தர்ப்பத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது.

இந்து சமயத்தவர் இப் பத்திரிகையின் வளர்ச்சிக்கு தம்மால் இயன்ற ஒத்தாசைகளை நல்கி ஊக்குவிக்க வேண்டும். ''இந்து கலாசாரம்'' மனம் தளராது இந்துக்களுக்கு தமது பங்களிப்பை செலுத்தி மேலும் பல ஆண்டு நிறைவுகளைக் கொண்டாடி நீடித்து நிலைக்க எனது நல்லாசிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.



திரு. க. சண்முகலிங்கம்

(பணிப்பாளர், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்)



திரு. வி. டி. வி. தெய்வநாயகம்பிள்ளை ஜே.பி.
அறங்காவலர்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
ஜிந்துப்பிட்டி, கொழும்பு-13

# இந்துக்களுக்கோர் கலங்கரைவிளக்கம்

இந்து கலாசாரம், இந்து சமய மக்களின் வாழ்வுக்கு கலங்கரை விளக்கம்போல் திங்கள் தோறும் வெளிவருவது நமது பூர்வ புண்ணியம்தான்!

இன்று சமூகத்தில் அமைதியின்மை, சஞ்சலம், துன்பங்கள் தொடர்ந்து எங்கும் கலக்கமாகவே இருக்கின்றது. இவ்வேளையில் இந்து கலாசாரத்தில் வெளிவரும் ஆன்மீக உரைகள் வளமானவை! நல்வாழ்வு வாழ்ந்து காட்டிய பெரியார்களின் வாழ்வைப் பல கோணங்களிலும் படம் பிடித்துக் காட்டி வருவது பின்பற்றக் கூடியவை.

இந்து கலாசாரம் இரண்டாவது ஆண்டு மலரை மலர்விப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி. இந்துக்கள் அனைவரின் கரங்களிலும் மிளிர்ந்து சிந்தனைத் தெளிவு ஏற்பட்டு சாந்தி, சமாதானம், ஒற்றுமை, வளம் பலவும் பெருக நமது ஜிந்துப்பிட்டி முருகன் திருவருள் புரிவாராக.

கௌரவ ஆசிரியர் வைத்தமாநிதி அனுபவம் நிறைந்த சைவப் பண்பாளர். அவரின் முயற்சி மென்மேலும் தொடரட்டும். இன்றைய சூழ்நிலையில் - பொருளாதாரம் குன்றிய நிலையில் - இந்து கலாசாரத்தை மாபெரும் மலராக - மணம் மிக்கதாக மலர்விக்க ஆசிரியருக்கு மனோதிடம் உண்டு என்பதை நாம் நன்கு அறிவோம்.

காகிதத் தட்டுப்பாடான காலத்தில் கையில் கிடைத்த மலரை தாமும் முகர்ந்து, மற்றையோரும் முகர்ந்து பலன் பெற வைப்பதே நம் கடனாகும்.

# பணி வாழ்க வளர்க வளம் பெறுக



சேவையில் பலவகை உண்டு. ஆயினும் மாறிக் கொண்டே இருக்கும் மனிதனை; பற்றுடைய பொருளிலேயே மனதை பறிகொடுக்கும் மனிதனை; மாற்றமில்லா பொருளைப்பற்றி சிந்திக்க வைக்கும் சேவை சிறப்புடையது. பேரின்பத்தை விட்டு நிலையற்ற இன்பத்தை நாடி ஓடும் மாந்தரை நிலையான இன்பம் பற்றி நினைவூட்டுவது அளப்பரிய சேவை. பற்று அற்றவன் பாதத்தை நாம் பற்ற உதவும் சேவை பெருமதிப்புடையது. இந்த சேவையை இந்து கலாசாரம் என்னும் இப் பத்திரிகை தொடர்ந்து சிறப்பாக செய்து வருகிறது என்று சொன்னால் மிகையாகாது. இதை பல இன்னல்களுக்கிடையே நடத்தி வரும் நண்பர்களுக்கு நன்றி நல்வாழ்த்துக்கள். இவர்கள் பணி வாழ்க, வளர்க, வளம்பெறுக எல்லாம் வல்ல இறைவனது ஆசியை இப்பணி என்றும் நடைபெற வேண்டி பிரார்த்திக்கிறேன்.

தெ. ஈஸ்வரன்
இந்திய சமுதாய பேரவை
உபதலைவர்



திரு. சி. தனபாலா
தலைவர்
சைவ முன்னேற்றச் சங்கம்
கொழும்பு-2

# பூரிப்படைகிறேன் !

இந்து சமயத்தின் வளர்ச்சிக்காக அரும் தொண்டாற்றி வரும் இந்து கலாசாரம் மாத இதழின் இரண்டாம் ஆண்டு நிறைவு கொண்டாடுவதையிட்டு நான் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றேன் சமய வளர்ச்சியில் மட்டுமன்றி, கலை கலாசார வளர்ச்சியிலும், தனது பங்களிப்பைச் செலுத்தி வரும் இந்து கலாசார இரண்டாம் வருடத்திற்கான சிறப்பு மலர் வெளியிடுவது மிகவும் சாலப் பொருத்தமானது. இதன் பணியில் ஈடுபட்டுள்ள அத்தனை பேரினதும், தளரா மனவலிமை கண்டு நான் பூரிப்படைகின்றேன்.

இரண்டாண்டோடு நின்றுவிடாது தொடர்ந்து பல ஆண்டுகள் இந்து கலாசாரம் பவனி வரவேண்டுமென்பதே எனது ஆசை. அவ்வாசை நிறைவேறவும் எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் இந்து கலாசாரத்துக்கு கிடைக்கவும், இரண்டாண்டு பூர்த்தி விழா இனிது நடைபெறவும் என் இதயம் கனிந்த நல்லாசிகள்.

# சமயக் குரவர்களாற்றிய பணியை இந்து கலாசாரம் தொடர்கிறது

தலைநகரின் கண் சைவம் மிளிர, பண்பு வளர, அன்பு தழைக்க, மலிவளம் சுரக்க ''இந்து கலாசாரம்'' வழி சமைக்கிறது. மனிதப் பிறப்பின் இலட்சியத்தை அறியச் செய்யும் இவ் இந்துமத இதழுக்கு, அதன் சீரிய பணிக்கு நாம் தலை வணங்க கடமைப்பட்டுள்ளோம்.

சைவம் வாழ, சைவர் வாழ வழிவகுக்கும் இம்மாத இதழில் சமயக் கருத்துக்களும், கட்டுரைகளும், அறிஞர் தம் அறிவுரைகளும், பொன்னான நற்கவிதைகளும், நம் நாட்டில் நடக்கின்ற சமய விழாக்கள் தம் விமர்சன, ஆய்வுரை கட்டுரைகளும், கடல் கடந்த தமிழர் தம் சைவப் பணி பற்றிய பயணக் கட்டுரைத் தொடர்களும், இன்னும் பயனுள்ளவை பலவும் கொண்டு வெளிவருகின்ற சிறந்ததொரு சைவசமய இதழெனில் மிகையன்று.

சைவநெறி நலிவுற்று, மெலிவுற்ற காலத்தில் எல்லாம் குரவர் பலர் தோன்றி, பரசமய இருளகற்றி, மெஞ்ஞான வழிகாட்டி நின்றனர். அன்று அவர்களாற்றிய தொண்டினை ஒத்ததே இன்று 'இந்து கலாசாரம்' ஆற்றும் பணியும்.

நம் சமய உண்மையை, கலாசார வெளிப்பாட்டை உலகெலாம் ஒளிரச் செய்ய உதவுகின்ற இம் மலரின் பணி மென்மேலும் சிறந்து, மிளிர வேண்டுமென்றும், எல்லாம் வல்ல இறைவனது பாதார விந்தங்களை பணிகின்றேன்.



திரு. கே. பாலசுப்ரமணியம்
பொதுச் செயலாளர்
சைவ முன்னேற்றச் சங்கம்
கொழும்பு 2

# இந்து சமுதாயத்திற்கு பயன்தர வேண்டும்



இ. சண்முக சர்மா

உதவிக் கல்விப் பணிப்பாளர்
(A. D. E.)

இன்றைய நிலையில் இந்து சமயத்தவர்களுக்கென வெளியாகிக் கொண்டிருக்கும் ஒரேயொரு மாத இதழ் இந்து கலாசாரமேயாகும்.

எல்லோரும் வாசித்து விளங்கிக் கொள்ளும் வகையிலே இந்துப் பண்பாட்டின் பல்வேறு வகையான சிறப்பம்சங்களையும், தத்துவார்த்த உண்மைகளையும் தன்னகத்தே உள்ளடக்கிக் கொண்டு மாதமொரு இதழாக "இந்து கலாசாரம்" வெளியாகிக் கொண்டிருப்பது போற்றத்தக்க விடயமாகும்.

இந்து கலாசாரப் பாரம்பரியங்களும் பண்பாட்டம்சங்களும் மக்கள் மத்தியிலே அருகிக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்திலே இவ்வாறான மாத சஞ்சிகைகள் வெளிவரவேண்டியது அவசியமாகும்.

சமய உண்மைகளையெல்லாம் ஒருங்கே திரட்டிக் கொடுத்து வாசகர் மனதிலே தெய்வீக சிந்தனைகளை வளர்த்தெடுக்கும் நோக்குடன் திங்கள் இதழாக வெளிவந்து கொண்டிருக்கும் இந்து கலாசாரம் இன்று ஒரு பூரண மலராக மலர்ந்து மணம் வீசுகின்றது.

காலச் சூழ்நிலையின் தேவை கருதி இவ்விதழை மாதமொருமுறை வெளியிடுகின்ற இந்து கலாசார மன்றத்தினரின் இப்பணி போற்றப்பட வேண்டிய தொன்றாகும். எனவே இந்து கலாசார மன்றத்தினரின் இப்பணியானது மேலும் பல்கோணங்களில் வளர்ச்சியடைந்து இந்து சமுதாயத்திற்குப் பயன்தர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

---

# வாசக நேயர்களுக்கு

39/23, Nelson Lane,
COLOMBO 3,
*15-8-1991*

அன்புடையீர்

தலை நகரிலிருந்து, இந்துமதச் செய்திகளையும் ஆன்மீக அருளாளர்களின் அருளுரைகளையும், ஆக்கங்களையும் தமிழோடு தொடர்புடைய கட்டுரைகளையும் தாங்கிய இதழாக கடந்த இரண்டு வருடங்களாக 'இந்து கலாசாரம்' எனும் இதழ் வெளிவருவதை அறிவீர்கள்.

சமயக் கருத்துகளைப் பரப்பும் இலட்சிய நோக்குடன் கடந்த இரண்டாண்டுகளாக பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தவறாது இவ்விதழை நாம் வெளியிட்டு வருகின்றோம்

பாடசாலைகள், சமய நிறுவனங்கள், ஆலயங்கள், வாசிகசாலைகள் போன்றவற்றிற்கு கடந்த காலங்களில் இலவசமாக இவ்விதழை நாம் அனுப்பி வைத்துள்ளோம். தொடர்ந்து இலவசமாக அனுப்பிவைக்க இயலாமையினால், இனிசந்தாதாரர்களுக்கு மட்டுமே இதழை அனுப்பிவைக்கத் தீர்மானித்துள்ளோம்.

ஆதலின், தாங்களும், தங்களுக்கு தெரிந்த சமய ஈடுபாடுள்ளோரும் எமது இதழின் சந்தாதாரர்களாகி இப்பக்தி இதழ் தொடர்ந்து வெளிவர எம்மை ஊக்குவிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். தங்கள் நிறுவனத்தின் விளம்பரப் பலகையிலும் இக்கடிதத்தை விளம்பரம்செய்யுமாறும் வேண்டுகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| தனிப்பிரதி | — | ரூபா | 5-00 |
| வருடச் சந்தா | — | ரூபா | 75 00 |
| ஆயுள் சந்தா | — | ரூபா | 1000-00 |

இங்ஙனம்
சமயப்பணியில்,
ஏ.எம். துரைசாமி (ஆசிரியர்)

# வாசகர் வட்டம்

வன்முறையாலும், பிறமத செல்வாக்காலும் தாழ்வுற்று மடிகின்ற இந்து மதத்தின் கலாசாரம் விஞ்ஞான ரீதியானது; யதார்த்த பூர்வமானது; இதனை நன்குணர்த்தும் 'இந்து கலாசாரம' இதழ் ஒவ்வொரு இந்துவின் கையிலும் இருக்கவேண்டும். அதனை ஒரு கடமையாக மேற்கொள்ளுங்கள்.

அ. குமரநாதன்
காரைதிவு (கி/மா)

●

சமயக் கட்டுரைகள், நற்சிந்தனைகள் செய்திகள் என்பவற்றை சுமந்து வரும் இந்து கலாசார இதழே உன் புகழ் ஆலவிருட்சம்போல் நிலைபெற்று வாழ்க.

சேனாதிராசா புவனேஸ்வரி
குசலை தமிழ் வித்தியாலயம்
குசலை, சிலாபம்.

●

தாமதமாகவேனும் தங்கள் இதழ்கள் கிடைக்கின்றன. ஒரு ஆலோசனை. சோதிடப்பகுதிக் கூப்பனை வெட்டும்போது அதன் பிற்பகுதியில் உள்ள முக்கியமான பகுதிகள் வெட்டப்படுகின்றன. மாற்று வழி செய்யுங்கள்.

கா. பரமானந்தராசா
களுதாவளை - 4, களுவாஞ்சிக்குடி.

●

மலையக இளைஞர் பேரவையின் 1991ம் ஆண்டு அன்பளிப்பு பிரசுரத்தினை கவிதையுடன் பிரசுரித்தமைக்காக பேரவையின் சார்பில் எமது நன்றிகள்.

அ. நந்தனி
மலையக இளைஞர் பேரவை
நிர்வாகி

உங்கள் இதழ்கள் எமக்கு தவறாமல் கிடைக்கின்றன. எல்லா விடயங்களையும் நான் தவறாமல் வாசிக்கின்றேன். சமயச் செய்திகளையும், ஆக்கங்களையும் இலண்டனிலிருந்து வாசிக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. உங்களின் ஆன்மீகப் பணிகளுக்காக இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

திருமதி ஜே. சண்முகநாதன்
சவுத் பாக் கிரசன்ட்
கெட்போட்
லண்டன்

●

தங்கள் இந்து கலாசாரம் இதழில் டாக்டர் கே. எஸ். காராளசிங்கம், 'தெளிவு வேண்டும்' என எழுதியிருந்த கடிதத்தில், பெரியவர்கள் கொல்லப்படுவதையும், அவர்களுடன் சேர்ந்து ஒரு பாவமும் அறியாத பச்சிளம் குழந்தைகளும் கொள்ளப்படுகின்றார்களே எனவும் கேட்டிருந்தார். இதற்கு திருமந்திரம் பல பாடல்களில் தெளிவான பதிலைத் தருகிறது. (148, 164. 2084, 2845, 2849 போன்றன) யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளும் 'எப்பவோ முடிந்த காரியம்' என்று கூறினார். பட்டினத்தடிகள் 'முன்செய்த தீவினை' என்று நொந்து கொண்டார். இதுவே நமது சமயம் தரும் தெளிவான விளக்கமாகும்.

திருமதி செல்வம் கல்யாண சுந்தரம்
திருமூலர் சங்கம்
பம்பலப்பிட்டி

---

கனடாவில் இந்து கலாசாரம்
கிடைக்குமிடம்:-

**No. 280 WELLESLEY STREET EAST**
**1718 TORONTO - ONTARIO**
**M4 XI G7**
**CANADA**

# நமது நோக்கு

## வடம் பிடிக்க வாருங்கள்

ஒரு சமயப் பத்திரிகையை, இரண்டு ஆண்டுகள் நடாத்திய பெருமையோடு, மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தருணத்திலே உங்களோடு எமது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம்.

ஒரு பத்திரிகையை வெளியிடுவதன் சிரமங்களையும் இடர்பாடுகளையும் அந்தத் துறையிலே ஈடுபாடு கொண்டவர்கள் நன்கறிவார்கள். அதிலும் ஆன்மீக நோக்குடன், சமய, தமிழ்த்துறை சார்ந்த கட்டுரை. செய்திகளோடு இந்து கலாசாரம் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் தவறாமல் வெளிவந்திருக்கிறது.

வியாபார நோக்கமும், இலாபமும் கருத்து முழுமையான சமய ஈடுபாட்டோடும், ஒரு இலட்சியப் பணியாகவும் நாம் இப் பத்திரிகையை வெளியிட்டாலும், அதன் பின்னால் உள்ள சுமைகள் எமக்கு நன்றாகவே புரிகின்றன.

கடந்த இரண்டாண்டு இதழ்களையும் புரட்டிப் பார்க்கும் போது, மலையளவு சாதனைகளை நாம் ஆற்றிவிடவில்லை என்றாலும், இன்றைய குழப்பங்கள் நிறைந்த காலத்திற்கேற்ற ஒரு பணியை - கட்டாயமாக ஆற்ற வேண்டிய ஒரு — ஆன்மீகச் செயற்பாட்டை செய்ய எமக்கு சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக எமது நன்றிகளை நாம் இறைவனுக்குச் செலுத்துகின்றோம்.

இலங்கையில் வாழ்கின்ற அருளாளர்களையும், வெளிநாடுகளிலிருந்து இலங்கை வருகின்ற யோகியர், ஞானியர்களையும் நாம் சந்திப்பதோடு அவர்கள் பற்றிய செய்திகளையும் தவறாது வழங்குகின்றோம், ஆழ்ந்த தத்துவங்கள் அடங்கிய கட்டுரைகளும் அவ்வப்போது இடம்பெறுகின்றன: அனைத்துப்பகுதி வாசகர்களையும் கருத்திற்கொண்டு, சோதிடப்பகுதி அரிவையர் அரங்கம், சிறுவர் பகுதி என்பனவும் இடம் பெறுகின்றன.

இந்து சமய மக்களிடையே சமய மறுமலர்ச்சியை ஊக்குவிக்கும் பணிகள் ஆலயங்கள் தோறும் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்து மன்றங்களும், சங்கங்களும் புதிதுபுதிதாகத் தோன்றி ஆன்மீக நடவடிக்கைகளை ஆற்றிவருகின்றன.

இவ் வேளையில், இந்துமக்களின் ஆன்மீக வலிமைக்கு ஒரு உந்துசக்தியாக எமது இதழ் அமைய வேண்டுமென்பதே எமது பேரவா. நல்லோர் பெருகி நன்மைகள் பெருகி, நாடு சிறக்க வேண்டுமென்பது எமது ஆவல்.

ஆதலின் வெறும் தாள்களை அச்சடிக்கும் வேலையை நாம் செய்வதாக எண்ணாமல், உன்னதமான எண்ணங்களோடு ஒரு இலக்கு நோக்கி நகர்கின்ற பெரும்பணி ஒன்றுனைப் புரிவதாக நாம் கருதுகின்றோம்.

ஆன்மீகத் தலைவர்கள், அருளாளர்கள் தமது நல்லாசிகளை எமக்கு தந்து வருகின்றார்கள். அமைச்சர் பெருமக்கள் எமக்கு உற்சாகமூட்டுகின்றார்கள். ஆலய அறங்காவலர்கள் எமது பணி சிறக்க வாழ்த்துகின்றார்கள். வாசகர்கள் எமது தோளோடு துணை நிற்கின்றார்கள்.

இருந்தும் நிதி என்ற காரணி எம்மை அவ்வப்போது தடைப்படுத்துவதுண்டு. நிரந்தரமான பல விளம்பரங்களோ அன்றி, சமய நிறுவனங்களின் ஆதரவோ, துணையோ இன்றி இரண்டு ஆண்டுகளை நாம் கடந்து வந்திருப்பினும், இனியும் இப்பணியைத் தொடர்ந்து ஆற்ற நிதி மிகமிக அவசியமாகின்றது. பாரதி விழைந்தது போல், நிதி மிகுந்தவர் பொற்குவை தந்தும், எதுவும் நல்கி, எவ்வகையானும் இப்பெருப்பணி ஆற்றவருமாறு அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இது ஒரு தேர்! தெய்வீகத் தேர்! தேர் உலா வந்தால், காண்போர் மனமெல்லாம் பரவசம் கொள்ளும். இறை இன்பம் துய்க்கும். ஆதலின் இந்துகலாசாரத் தேர் திரு உலா வர எம்மோடு இணைந்து வடம் பிடிக்க வாருங்கள்.

இந்த தெய்வீகப் பணியிலே நீங்களும் பங்கு கொள்ளுங்கள். நாளையப் பொழுதுகள் நல்லவைகளாக விடிய இன்றே விதைகளைத் தூவி விடுவோம்.

வாருங்கள்—தேரை
வடம் பிடித்திழுப்போம்!!

---

துயரம் வந்தால் துவண்டு போகாதீர்கள்! இவை நம்முடைய முன்னேற்றத்தில் உதவக்கூடியவையே என்று கருதுங்கள். நம்முடைய வாழ்க்கைக் குறிக்கோளை எய்தியே முடிப்போம், அதை எந்தவிதமான ஆற்றலும் தடைசெய்ய முடியாது என்று உணர்ந்து துணிவுடன் பயணத்தைத் தொடருங்கள்.

— ஜேம்ஸ் ஆலன்.

---

## இந்துகலாசாரம் இதழின்

# தோற்றமும் வளர்ச்சியும்

தலைநகரிலிருந்து இந்துமதச் செய்திகளையும், ஆன்மீக அருளாளர்களின் ஆக்கங்களையும் தமிழ்த் துறைக் கட்டுரைகளையும் தாங்கிய இதழாக இந்துகலாசாரம் எனும் திங்கள் இதழ் வெளி வந்துகொண்டிருப்பதை வாசகர்கள் நன்கு அறிவார்கள்.

கடந்த இரண்டு வருடங்களாக சமயக் கருத்துகளைப் பரப்பும் நோக்குடன் பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தவறாது இவ் விதழை நாம் வெளியிட்டு வருகின்றோம்.

சஞ்சிகையொன்றினை வெளியிடுவது எத்தனை சிரமமான காரியம் என்பதனை எமது இரண்டு வருட அநுபவங்கள் நன்குணர்த்துகின்றன. ஆயினும் இது ஓர் ஆன்மீகக் கடமை என்பதனால் அருளாளர்களினதும், அறிஞர்களினதும் வாழ்த்துக்களையும், ஆசிகளையும் மூலதனமாகக் கொண்டு இவ்விதழைப் பிரசுரித்து வருகின்றோம்.



திரு ஆர். விஜயபாலன்

இடரினும், தளரினும், எமதுரு நோய் தொடரினும் அவன் கழல் தொழச் செய்யும் பணியை இந்து கலாசாரம் தனது இலட்சிய நோக்காகக் கொண்டுள்ளது.

கடந்த எமது இரண்டு வருடப் பணியின் மூலம், இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள ஆன்மீகப் பெரியார்கள், ஆலய அறங்காவலர்கள். சமய தாபனங்கள் வாசகர்கள் அனைவரதும் நம்பிக்கையை சம்பாதித்துக்கொண்டவொரு இதழாக இந்து கலாசாரம் மிளிர்கிறது.

இப்படியொரு சஞ்சிகையாவது இந்துமத செய்திகளைச் சுமந்து வருகிறதே என்று பலரும் வாழ்த்துகின்ற அளவு இந்த இதழை வளர்த்து விட்டிருக்கிறோம்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், நல்லூர் ஆதீன மகா சந்நிதானம், திருமுருக கிருபானந்த வாரியார் போன்ற ஆன்மீக அருளாளர்களின் ஆசிர்வாதங்கள், அருள் வாக்குகள் எமக்கு அளவில்லாத மனத்தெம்பினை நல்கின.

நாம் இலக்கு நோக்கி, இலட்சியம் நோக்கி நகர்கின்றோம் கடந்த ஆண்டு எமது முதலாவது ஆண்டு மலர் வெளிவந்தபோது இலங்கையின் பிரபல தமிழ்த் தினசரியான தினகரன் (25-2-1990ம் திகதி) தனது ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்ட விடயத்தை இவ்விடயத்திலே மீட்டுவது பொருத்தமாக இருக்கும்.

''ஒரு காலத்தில் ஒஹேறா வென்றிருந்தநாவல் நகர் ஆத்மஜோதியைப் போன்று இந்து சமயப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள இந்த பக்தி ஏடு தலைநகரில் இரு பெரும் பணிகளைச் செய்ய இலட்சியம் கொண்டுள்ளது. ஒன்று, இலங்கையில் இருபத்தொரு இலட்சம் இந்துப்பெருங் குடியினர் வாழ்கின்றபோதிலும் தலைநகரில் அவர்களுக்கென ஒரு இந்து கலாசார நிலையம் இல்லாத குறையை நீக்குதல். மற்றது, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்கட்கு கொழும்பிலே ஒரு மடம் எழுப்பி அரசரீதியில் சகல குருமாருக்கும் கிடைக்கப் பெற்றுள்ள அங்கீகாரங்கள் இந்துக் குருமகா சந்நிதானத்திற்கும் கிடைக்க வழி செய்தல்.

என தினகரன் எம்மை அறிமுகம் செய்திருந்தது.



திரு ஆர். வைத்தமாநிதி

இந்தப் பணிகளோடு, மலையகமெங்கும் உள்ள திருத்தல வரலாறுகளை ஆராய்ந்து நூலுருவாக்குதல், மலையகமெங்கும் இந்து கலாசார நிலையங்களை அமை

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# இந்துகலாசாரம் இதழின் . . .

(14ம் பக்க தொடர்ச்சி)

த்து சமய புத்துணர்வினை அளிக்குமாறு இந்து கலாசார இராஜாங்க அமைச்சினைத் தூண்டுதல் போன்ற பெரும் பணிகள் உள்ளன.

கடந்த ஆண்டு எமக்கு அரிய வாய்ப்புக் கிடைத்தது. எமது ஆசிரியர் திரு. ஏ. எம். துரைசாமி அவர்கள் இங்கிலாந்து நாட்டில் வாழும் இந்து அன்பர்களின் அழைப்பின் பேரில் அங்கு சென்று ஆறு மாதங்கள் தங்கி இருந்து ஆலயங்கள், சமயத்தாபனங்கள் இசைமன்றங்கள் என்பவற்றிற்கு விஜயம் செய்தார். அவர் தம் அநுபவங்கள் ' இங்கிலாந்தில் இந்து கலாசாரம்'' என்ற பயணக் கட்டுரைத் தொடராக வெளி வந்துகொண்டிருக்கின்றன.

இரண்டு ஆண்டுகள் நாம் ஆன்மீக மணம் பரப்பியுள்ளோமெனினும் எமக்கு உரமூட்டி, உறுதுணை தந்தோரை இவ்விடத்திலே நன்றியோடு நினைவுகூறுகின்றோம்.

இந்துகலாசாரம், ஒருசிறந்தஆன்மீக இதழாக வெளிவர வேண்டும் என்பதிலே மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் அமைச்சுப் பொறுப்பை ஏற்றபின் திரு. தேவராஜ் அவர்கள் தமிழுக்கும் சமயத்திற்கும் ஆற்றிவரும் பணிகள் நன்கறிந்தன. தமிழ் சாகித்திய விழா, தியாகராஜ ஆராதனை தமிழிசை அரங்குகள், நாடகவிழா பேருரைகள், என அமைச்சரின் சேவைகள் சாதனைப் பட்டியல் களாக விரிகின்றன. அவர் தம் உற்சாகமும் ஊக்கமும் எமக்கு உந்துசக்தியாக அமைந்தன. அமைச்சர் அவர்களுக்கு இந்து கலாசாரம் என்றும் நன்றியுடையது. அவர் பணிகள் சிறக்க வாழ்த்துகின்றோம்.

இந்த இதழ் தவறாது வெளிவர தாங்கிப்பிடிக்கும் தூண்களாகத் திகழ்பவர்கள் இதழின் கௌரவ ஆசிரியர் திரு ஆர். வைத்தமாநிதி அவர்களும், திரு ஆர். விஜயபாலன் அவர்களும் என்பதை நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

திரு வைத்தமாநிதி அவர்கள், சைவப்பெரியார் திரு ஆர். எம். ரெங்கநாத பிள்ளை அவர்களின் அருமைப் புதல்வராவார். திரு ரெங்கநாத பிள்ளை ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமிகோயில் கதிர்காமம் சடையம்மா மடம், திருக்கேதீஸ்வரம் திருவாசக மடம் போன்ற இடங்களில் தனது காலமெல்லாம் தொண்டாற்றியவர். இல்லையென வந்தோர்க்கு ஈந்து மகிழ்ந்தவர். பிரபல சட்டத்தரணிகளான கே. சி. இரங்கநாதன், எஸ். நடேசன், சிவதர்ம வள்ளல் கே. கனகராசா போன்றவர்களின் நண்பனாகவும் அரசியற் பிரமுகர்களான சேர் ஒலிவர் குணதிலக, டி. எஸ். சேனநாயக்கா, சேர் ஜோன் டாபர்ட் ஆகியோருடன் நெருங்கிப் பழகியவராகவும், இருந்தவர். கொழும்பு விவேகாநந்த சபையில் ஆயுள் உறுப்பினராக இருந்து தொண்டு செய்தவர்.

அத்தகைய பெரியார் விட்டுச் சென்ற பணிகளை அவர்தம் புதல்வர் தொடர்ந்து ஆற்றுகின்றார். எமது இதழின் கௌரவ ஆசிரியராக இருப்பதோடு, இதழின் வளர்ச்சியிலே தன்னை அர்ப்பணித்துக் கொள்பவர்.

இரண்டாமவர், கொழும்பின் பிரபல வர்த்தக ஸ்தாபனமான ஜே. எல். எஸ். நிறுவனத்தின் உரிமையாளர் பெரியார் இராமசாமி ரெட்டியாரின் அருமைப் புதல்வர் திரு ஆர். விஜயபாலன் ஆவார். எந்த நல்ல பணிக்கும் அள்ளி வழங்கும் அன்பர் தனது வருமானத்தின் ஒரு பகுதியையே தான தர்மங்களுக்கு ஒதுக்கி வைப்பவர். மலையகத்தின் பல கோயில்களுக்கும், பாடசாலைகளுக்கும் நிதியுதவி செய்துள்ளதோடு மாணவ மாணவியருக்கும் தாராளமாக உதவுபவர். இவரது முயற்சியால் பலாங்கொடை ஆலயமொன்றுக்கு நவக்கிரக சிலைகள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டன.

அதற்கான மொத்த செலவினங்களையும் அவரே பொறுப்பெடுத்துக்கொண்டமை குறிப்பிடத் தக்கது.

எமது இந்து கலாசாரம் இதழ் வெளியிடும் சிரமங்களை நிதி உதவியின் மூலம் குறைத்தவர் திரு விஜயபாலன் அவர்கள். தன்னைத் தேடிவரவேண்டாம் என அன்புக் கட்டளை இட்ட இந்த நல்லவரின உதவிகள் மாதாமாதம் எம்மை வந்து சேருகிறது. வரையாது வழங்கும் அவர்தம் உயரிய பண்புகளுக்கு நாம்தலை வணங்குகிறோம்

அடுத்ததாக ஜிந்துப்பிட்டி, ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோயில் அறங்காவலரும் அருட்தொண்டருமாகிய திரு வி. டி. வி. தெய்வநாயகம் பிள்ளை அவர்களுக்கு நாம் மிகவும் நன்றி செலுத்த வேண்டியவர்களாவோம் உதவி நாடியபோதெல்லாம் தாராளமாகத் தந்த அந்தப் பெருந்தகையை நாம் என்றும் மறப்பதற்கில்லை.

விளம்பரங்கள் தந்துதவுவோர் வரிசையிலே எமதுநன்றிக்குரியோர் பலர் உளர் எனினும் ரேணுகா இன்டஸ்ட்ரீஸ் அதிபர் திரு. யு நடராஜன் அவர்களை நாம் குறிப்பிட்டே ஆகவேண்டும். அவர்தம் பெருமனதிற்கு எமது நிறைவான நன்றிகள்.

இவற்றோடுஇந்துகலாசாரவெளியீட்டில் தம்மையும் பிணைத்துக் கொண்டு செயற்படுவோர் பலர். அவர்களையும் நாம் நினைவு கூருகின்றோம். ஒஸ்கா அச்சக உரிமையாளர்கள் திரு நா. ஹரிதாஸ், திரு டி. ஏ. கெமிலஸ் பர்னாந்து அன்புப் பணி செய்யும், பண்டாரவளை அன்புச்செல்வன், திரு எம். சதாசிவம் ஆகியோரின் பங்கும்

(தொடர்ச்சி 19ம் பக்கம் பார்க்க)



## அன்னம் சுத்தமானால்

# எண்ணம் சுத்தமாகும்!

— காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் —

இன்று நாம் படும் அநேக இன்னல்களுக்குக் காரணம், வெளிநாட்டுப் பழக்க வழக்கங்களையே நாமும் காப்பி அடிப்பதுதான். இவற்றில் ஒன்று, பயிர் பச்சைகளுக்கு ரஸாயன எரு (Chemical fertiliser) போடுவது. இந்த வழக்கத்தை விட்டு இயற்கையான எரு உபயோகிக்க ஆரம்பித்தாலே போதும், நம் தேசத்துக்கே விசேஷமான ஞானத்தைத் திருப்பப் பெறுவதில் வெகுதூரம் முன்னேறி விடுவோம்.

நம்முடைய மனசு எண்ணங்கள் சுத்தமாக இருக்க வேண்டுமானால், நாம் உண்ணும் உணவு தூயதாக இருப்பது மிகவும் அவசியம். தானியத்தையும், காய்கறிகளையும் சமைக்கிற போதில் அவற்றில் பலவித மாகத் தூய்மைக் குறைவு உண்டாவது ஒரு பக்கம் இருக்கட்டும். முதலில் அந்தத் தானியங்கள், அல்லது காய்கறிகளே எப்படி விளைச்சல் செய்யப்பட்டன என்று கவனிக்க வேண்டும். ரஸாயன உரம் போட்டு விளைவிக்கும் பயிர் பச்சைகள் சுத்தக் குறைவானவைதாம்.

பசும் சாணத்தை உரமாக உபயோகிப்பதுதான் நம் பழைய வழக்கம். பசு ஸத்வ குணம் நிறைந்த பிராணி. எனவே, அந்த உரத்திலிருந்து விளைந்த பயிரும் நமக்கு ஸத்வ குணம் உண்டாக உதவியது. இப்போது உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் கெமிகல் ஃபெர்டிலைசருக்கு மாறியிருக்கிறோம். மனசுக்கு அநுகுணமாக தேசத்தை வளர்க்கிற முறையே இதனால் மாறிவிட்டிருக்கிறது. இது மிகவும் கவலைத்துக்குரிய விஷயம் என்று நான் கருதுவதால்தான், இந்த தவற்றைத் திருத்த வேண்டும் என அடிக்கடி வலியுறுத்தி வருகிறேன். உணவு உற்பத்தியைப் போலவே, அல்லது அதை விடவும், மக்களின் மன இயல்பை நல்லபடியாக வளர்ப்பது அவசியமல்லவா?

தூய உணவு என்றால் நன்றாகத் தீட்டி, 'பாலிஷ்' செய்த அரிசியை வெள்ளை வெளேரென்று சமைத்துப் போடுவது அல்ல. பல விதமான எச்சில், தீட்டு, அநாசாரங்களைச் செய்து கொண்டே ஒரு லாண்டிரியில் துணியை வெள்ளை வெளேரென்று ஆக்கிக் கொடுத்து விட்டால், அதை மடி என்று வைத்துக் கொள்வோமா? எனவே பார்வைக்கு வெளுப்பாக இருந்து விட்டாலே ஒன்றை நல்லது என்றோ, தூயது என்றோ, ஆசாரமானது என்றோ சொல்ல முடியாது. வெளியில் சுத்தமாகத் தெரிவது வேறு; உள்ளே புனிதமாய் இருப்பது வேறு.

சமைக்கிறவனின் மனோபாவம், அவன் சமைக்கிற உணவில் இறங்கி, அதை உண்பவன் உள்ளும் சென்று விடுகிறது. ஸத்வ குண அபிவிருத்திக்கு உதவுகிற உணவுகள் என்று கீதை முதலான சாஸ்திரங்களில் சொல்லியுள்ள வஸ்துக்களை நல்ல ஸத் சிந்தனையோடு சமையல் செய்து போட்டால், அது போஜனம் செய்கிறவனுக்குச் சித்த சுத்தியைக் கொடுக்கும்.

மற்றவர்கள் சமைக்கிறபோது வெளித் தூய்மை உள் தூய்மைகளை எவ்வளவுக்குக் கைக்கொள்கிறார்கள் என்று நாம் தீர்மானமாகத் தெரிந்து கொள்வதற்கில்லை. அதனால் அவரவரும் தானே சமைத்துச் சாப்பிட வேண்டும் என்று வைத்து, இதை 'ஸ்வயம் பாகம்' என்ற ஒரு உத்தமமான விதியாக சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. பகவத் நாமாக்களைச் சொல்லிக் கொண்டே அவரவரும் சமைத்துச் சாப்பிடுவது என்று ஏற்பட்டால் ஸத்வ குணம் தேசத்தில் அபரிமிதமாக வளர்ந்து விடும். முன் காலத்தில் மோர் சிலுப்புவது, சமைப்பது ஆகிய சமயங்களில் பெண்மணிகள் ஏதாவது ஸ்தோத்திரங்கள், தெய்வ சம்பந்தமான பாடல்கள் பாடியபடிதான் இருப்பார்கள்.

அவரவரும் தானே தன் சாப்பாட்டைச் சமைத்துச் சாப்பிடுவது மிகவும் விசேஷம். அடுத்தபடி வீட்டுச் சாப்பாடு இதிலே வஸ்துகளின் தூய்மை, சமைக்கிற காலத்தில் சமைக்கிறவரின் மனத் தூய்மை இவற்றை ஓரளவுக்காவது பெறமுடியும். உணவு படைப்பவருக்கு உண்பவர் மீதுள்ள நல்லெண்ணத்துக்கே ஒரு நல்ல சக்தி உண்டு. ஹோட்டல் சாப்பாடு என்று எடுத்துக் கொண்டால், அது தீட்டின அரிசி போலவும் லாண்டிரித் துணி போலவும் வெளியே பார்த்தால் அழகாக, சுத்தமாக இருந்தாலும், அதில் வகஸ்வதத்தில் சாரமில்லை. உடம்பு உள்ளம் இரண்டுக்கும் அதில் நல்லதில்லை. போஜன சாலைகளில் சமைக்கிறவர் எப்போபட்ட எண்ணங்களுடன் தன் காரியத்தைச் செய்வாரோ? நிச்சயமாக அவருக்கு அதைச் சாப்பிட போகிறவரிடம் அன்பும், நலனெண்ணமும் பெருகப் போகிறதில்லை. 'விற்பனை' என்று வந்து விட்டதால் உண்கிறவருக்கு வயிராரப் போட வேண்டும் என்ற எண்ணத்துக்குக் கூட இடமில்லை.

சாப்பிடுகிறவர், உண்கிற வேளையில் நிறைந்த மனஸோடு, சந்தோசத்தோடு உண்ண வேண்டும்.

(தொடர்ச்சி 20ம் பக்கம்)

இங்கிலாந்தில் இந்து கலாசாரம்

# இலண்டனில் மெய்கண்டார் ஆதீனம்

உலகின் எந்தப்பாகத்திலும் தமிழர்கள் வாழுமிடமெல்லாம் தமிழோசை கேட்கிறது இந்துக்கள் வாழும் இடம் எல்லாம், ஆலயங்கள் எழுகின்றன. ஆதீனங்களும், மடாலயங்களும் அருட்சங்கங்களும் ஆன்மீகநெறியைப் பரப்புகின்றன அந்த வகையில், இலண்டனிலிருந்து இயங்கும் மெய்கண்டார் ஆதீனத்தை எமது வாசகர்களுக்கும் அறிமுகம் செய்வதில் மகிழ்வுகொள்கிறோம். 1979ம் ஆண்டிலிருந்து இயங்கிவந்த பிரிட்டன் சைவசித்தாந்தச் சங்க அமைப்பாக 1986ம் ஆண்டு ஜனவரியிலிருந்துலண்டன்மெய்கண்டார் ஆதீனம் என்ற பெயரில் இயங்கி வருகின்றது. ஆதீனம் என்ற முறையில் பிரிட்டனில் அமைந்த முதலாவது சைவ ஆதீனம் இதுவாகும், அத்துடன் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு தர்மஸ்தாபனமாகவும் இது விளங்குகின்றது. மேன்மைகொள் சைவநீதியும், சைவ சித்தாந்தக் கருத்துக்களும் உலகமெங்கும் விளங்க லண்டனிலிருந்து பணியாற்றியோரில், திரு ஞானசூரியர் என்ற பெருந்தகைக்கு மிகப்பெரிய பங்குண்டு. அன்னார் லண்டனில், தமிழும் சைவமும் தழைக்க பல்லாண்டுகளாக பாடுபட்டுவருகின்றசைவத்தமிழ்ப் பேராளர். பல பட்டங்களைப் பெற்றுள்ளதோடு, உயர்பதவிகளையும் வகித்தவர் அவரே.



தவத்திரு குன்றக்குடி அடிகளாருடன் தவத்திரு சுவாமி சிவநந்தி அடிகள்.

லண்டன் மெய்கண்டார் ஆதீனம் லண்டன் சைவசித்தாந்த நிலையம் என்பவற்றை நிறுவியதோடு அவற்றின் அறங்காவலருமாகத் திகழ்கின்ற பெருமைக்குரியவர். லண்டனிலே நிலைத்துள்ள சைவ முன்னேற்றச் சங்கம் அன்னாரின் அரும் பணிகளைப் பாராட்டி ''சைவ சித்தாந்தச் செம்மல்' என்ற பட்டத்தை அளித்து கௌரவித்தது.

திரு. ஞான சூரியர் அவர்களோடு லண்டன் வாழ் இந்துப் பெருமக்கள் பலர் இவ்வாதீனத்தில் முகாமைத்துவ உறுப்பினர்களாகவும், ஆலோசகர்களாகவும் உள்ளனர். கடந்த ஆண்டுகளில் லண்டன்வாழ் இந்துக்களின் பேருதவியோடு இவ்வாதீனம் பல அரிய செயற்பாடுகளை நிறைவேற்றியுள்ளது சைவ சித்தாந்தக் கருத்தரங்குகள், நடாத்தப்பட்டதோடு சித்தாந்தப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன, ஆதீன அறங்காவலரான திரு. ஞானசூரியர் லண்டன் ஸ்ரீ முருகன் ஆலயம், லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம் லண்டனிலுள்ள ஏனைய இந்து ஆலயங்கள் போன்றவற்றில் சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகளை நடாத்தினார். அத்துடன் மேலைநாட்டவரும், பிற மதத்தவரும் கூடியுள்ள பல கூட்டங்களில் திரு ஞானசூரியர், 'சிவநடனம்' தென்னிந்திய சிவன்கோயில்கள் போன்ற சிறப்பு விரிவுரைகளை ஆற்றினார்.

மெய்கண்டார் ஆதீனம், பிரிட்டனிலும்ஏனைய நாடுகளிலும்உள்ள இந்து ஆலயங்களுடனும், நிறுவனங்களுடனும் தொடர்புகொண்டு வருகிறது.

பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மைகளையும், அவற்றின் தன்மைகளையும் கோயில்களிலும் குருபூஜைகளிலும் சமயப் பிரசுரங்கள் மூலமும் பரப்புவதையும் சைவசித்தாந்த வாழ்வு முறையை உணர்ந்து அனைவருக்கும் உணர்த்துதையும் ஆதீனம் தனது இலட்சியமாகக் கொண்டுள்ளது. ஆதீனத்தில் அடிநாதமாக மெய்கண்டதேவர் அருளிச் செய்த, சிவஞானபோதம் விளங்குகின்றது. உலகளாவிய ரீதியில் சைவத் தொண்டாற்றவும் ஆதீனம் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

1989ம் ஆண்டு தனது அறுபது வயதை நிறைவுசெய்துகொண்ட கல்விமானான திரு கி. ஞானசூரியர் அவர்கள் சைவ மரபினைப் பேணி சந்நியாச தீட்சை பெற்றுக்கொண்டதோடு மெய்கண்டார் ஆதீனத்தின் ஆதீனகர்த்தராகவும் விளங்குகின்றார் திரு கி ஞானசூரியர் அவர்கள்.

சந்நியாசம் பெற்றதோடு ஆதீனகர்த்தர் தவத்திரு சுவாமி சிவநந்தி அடிகளார் என்ற பெயர்நாமத்தோடு ஆன்மீகப்பணிகளை ஆற்றி வருகின்றார். கடந்தவருட ஏப்ரலில் சுவாமி சிவநந்தி அவர்கள், சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகளுக்காக கொழும்பு, சென்னை, சிதம்பரம், சிங்கப்பூர், கோலாம்பூர் பினாங் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தார். இங்கு ஆற்றிய சித்தாந்தச் சொற்பொழிவுகளில் சுவாமி சிவநந்தி அவர்கள் சமய வாழ்வு வாழ்வதன் அவசியத்தையும், இளைய சமுதாயத்தினருக்கு இதனை உணர்த்தவேண்டிய கட்டாயத்தையும் வலியுறுத்திப் பேசினார்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# எமது அஞ்சலி



திருமதி பத்மாவதி சுபபையா

சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் சைவ சமய வளர்ச்சிக்கு வித்திட்ட ஒரு அருட்பெருந்தகை வாழ்ந்தார். அப் பெருந்தகைதான் சிவநேயச் செல்வர் அமரர் திரு கே. பி. பரமசிவம் அவர்களாகும். அப் பெருந்தகையின் சிரேஷ்ட புதல்வியும் மலையக மெங்கும் ஒரு காலத்தில் ''பனாவத்தை சுப்பையா'' என பிரசித்தி பெற்றிருந்தவரான பனாவத்தை அமரர் எம். வி சுப்பையா அவர்களின் தர்மபத்தினியான திருமதி பத்மாவதி சுப்பையா அவர்கள் கடந்த 5-3-91ல் தனது 71-வது வயதில் இறைவனடி சேர்ந்ததை அறிந்து மிகவும் துயரமடைகிறோம்.

திருமதி பத்மாவதி அம்மையார், நிறைந்த தெய்வ பக்தியுள்ளவர். சமயப் பணிகளில் தளராத ஊக்கம் கொண்டவர் நெற்றி நிறைய திருநீறு பூசி வெண்ணிற ஆடைகளுடன் காட்சியளிக்கும் அம்மையாரைப் பார்க்கும் போது நமது உள்ளங்களிலே காரைக்கால் அம்மையாரோ என எண்ணத் தோன்றும். தேவாரம், திருவாசகங்களை எப்பொழுதும் அவரது வாய் முணுமுணுத்துக் கொண்டிருக்கும்

கொள்ளுப்பிட்டியில் அமரர் கே பி. பரமசிவம் அவர்கள் இந்து சமாஜம் நிறுவி சமயத்திற்கும், தமிழ் இனத்தவருக்கும் பணி செய்தபோது இளம் வயதினரான அம்மையார் தமது தந்தைக்கு உறு துணையாய் இருந்துள்ளார்.

திருமதி பத்மாவதி அம்மையார் கொள்ளுப்பிட்டி சென் மார்கிறெட் கொன்வென்டில் தனது ஆரம்ப கல்வியை பெற்றார். பின்னர் பாளையம் கோட்டை சாரா டக்கரிலும், குலசேகரப் பட்டிணத்திலும் கல்வி பயின்று, தஞ்சை அரசினர் ஆசிரியப் பயிற்சி கல்லூரியில் சேர்ந்து ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியையாக வெளியேறினார். அதன் பின்னர் சிதம்பரம் புகழ் பெற்ற சுவாமி சகஜானந்தா நிறுவிய நந்தனார் பாடசாலையில் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியையாக பதவியேற்றார். நந்தனார் மடத்து ஆசிரமத்தில் சுவாமி சகஜானந்தா அவர்களிடம் சமய சாஸ்திரங்களை துறவறக் கற்றார். சுவாமிகளின் கட்டளைக்கிணங்க பல சமூக சேவைகளை அங்குள்ள சேரிப் புறங்களில் செய்து சுவாமிகளின் நன்மதிப்பை பெற்று சிறந்த சமுக சேவகியாக மதிக்கப்பட்டார்.

1945-ம் ஆண்டு திரு எம். வி. சுப்பையா அவர்களை திருமணம் செய்துகொண்டு இலங்கை திரும்பினார். இலங்கை திரும்பிய அம்மையார் தமது கணவர் தொழில் புரிந்த எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த பனாவத்தை தோட்டத்தில் குடிபுகுந்தார். அங்கு அம்மையாரின் சமயப் பணிகளுக்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. அவரது கணவர் அமரர் திரு எம். வி. சுப்பையா அவர்கள் தோட்டத்தில் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிக்கு ஒரு கோவில் கட்டுவதில் மிக தீவிரமாக ஈடுபட்டிருந்தார். அம்மையார் தமது கணவருக்கு பக்கத் துணையாய் இருந்து செய்த திருப்பணிகளை இன்னும் அத்தோட்டத்து மக்கள் அனைவரும் தமிழர் சிங்களவர் என்ற பேதமின்றி நினைவு கூறுகின்றனர்.

திருமதி பத்மாவதி அம்மையார் ஐந்து மக்களைப் பெற்ற் மகராசியாவார்.

இந்து கலாசாரம் ஆரம்பித்த காலமுதல் அதன் வாசகர்களில் குறிப்பிடத்தக்கவர். ஒவ்வொரு மாதம் முடிந்ததும் இந்து கலாசாரம் எப்போது வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்திருப்பார். பக்கத்துக்கு பக்கம் வரிக்கு வரி படித்து குறை நிறைகளை எடுத்துக் கூறுவார். எழுத்துப் பிழைகளையும் சுட்டிக் காட்ட தவறமாட்டார்.

இத்தகைய ஒரு சிறந்த வாசகரை இந்து கலாசார இதழ் இனி எப்போது பெறப்போகிறது என்பதை நினைக்கும்போது மனம் ஏங்குகிறது.

நமது இந்து கலாசார ஆசிரியர் குழுவில் ஒருவராக பணியாற்றும் திருமதி சுபாஷிணி சுதந்திரராஜன் அம்மையாரின் சிரேஷ்ட புதல்வியாவார். திருமதி சுதந்திரராஜனுக்கும் அவரது அருமைச் சகோதரர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திருமதி பத்மாவதி சுப்பையாவின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறோம்.

— ஆசிரியர்

# எமது கண்ணீர் அஞ்சலி



திருமதி சாரதா சிவபாதம்

மீன்பாடும் தேன் நாடாம் மட்டுமா நகர்தந்த அறிவுக் களஞ்சியமும், மட்டக்களப்பு வின்சென்ற் மகளிர்கல்லூரி உயர்தர விஞ்ஞான ஆசிரியையும், [illegible] இலக்கணமும், சாந்தத்தின் உறைவிடமுமான திருமதி சாரதா சிவபாதம் அவர்களை அக்கினியின் அகோரப் பசிக்கு இரையாக்கிவிட்டனரே!

ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தாஜி அவர்களின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிவிட்டு தனது இல்லம் திரும்பும் வழியிலேயே அன்னையாரையும் அந்த செந்தனல் அப்படியே ஆக்கிரமித்து அழித்துவிட்டதே!

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் தனது தந்தையையும் தாயையும் ஒருங்கே இல்லத்துடன் அதே அக்கினியின் அகோர பசிக்கு தாரைவார்த்துக் கொடுத்த திரு சிவபாதம் இன்று அவரது அருமை மனைவியையுமல்லவா அந்த அகோரத் தாண்டவமாடும் அக்கினிக்கு இரையாகக் கொடுத்துவிட்டாரே! அவரது இதயமோ தினம் தினம் இரத்தக் கண்ணீரையல்லவா வடித்துக்கொண்டிருக்கிறது.

இதற்கு எதனையும் தான் ஈடாக்க முடியுமா?

ஏழு வயதுப் பாலகியையும், நான்கு வயது பிஞ்சுப் பாலகனையும் தவிக்க விட்டுவிட்டு தாய் நடுவழியிலே நயவஞ்சகர்களின் கூட்டத்தில் மாட்டி நடுத் தெருவில் எரிக்கப்பட்டாரே!

இப்படியான புத்தி ஜீவிகளை இழந்துகொண்டிருந்தால் எமதுசமுதாயத்தின் எதிர்காலம் 'இருண்டு விடுவது திண்ணம்.

என்றுதான் விடிவு? என்றுதான் விமோசனம்? சமாதானம் தோன்றி, சமத்துவ வாழ்வு சமுதாயத்தில் நிலவுமா? அன்றில், மனித உயிர்களே இல்லாத வெறும் மணற்தரைதான் எங்கும் பரந்து கிடக்குமா?

திருமதி சாரதா சிவபாதத்திற்கு இந்துக் கலாசாரத்தின் கண்ணீர் அஞ்சலியும், அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களும்!

## இங்கிலாந்தில் இந்து . . .

(17ம் பக்க தொடர்ச்சி)

தமிழகத்தில், தர்மபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆகிய ஆதீனங்கள் சுவாமி சிவநந்தி அவர்கட்கு வரவேற்பும் கௌரவமும் அளித்தன. தர்மபுரம் மடாலயத் தலைவருடன் மூன்றாவது அகில உலக சைவ சித்தாந்தப் பேருரைகளை இவ்வாண்டு கனடா மெக்மாஸ்டர் பல்கலைக்கழகத்ல் நடாத்துவதுபற்றியும் சுவாமி சிவநந்தி அவர்கள் உரையாடினார்.

அண்மையில் மகாராஜபுரம் சந்திதானம் அவர்களின் இசைக்கச்சேரி அடங்கிய ஒலிப்பதிவு நாடா ஆதினத்தினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. இவ்வாண்டு மேமாதத்தில் லண்டன் சைவமுன்னேற்றச் சங்கத்துடன் இணைந்து ஆதீனம் தவத்திரு குன்றக்குடி அடிகளாரை வரவேற்று லண்டன் முருக ஆலய மண்டபத்தில் பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்தியது. ஜூலை மாதத்தில் 'பிரசாத யோகம்' எனும் பிரசுரம் ஆதீனத்தால் வெளியிடப்படவுள்ளது.

இவ்வாறு லண்டனிலே மெய்கண்டார் ஆதீனம் சிறப்புற இயங்க ஆதீனகர்த்தர் சுவாமி சிவநந்தி அவர்களின் அயராத உழைப்பும் ஆன்மீக வலிமையுமே காரணமாகும்.

எந்நாட்டவர்க்கும் இறைவனான தென்னாடுடைய சிவனின் புகழை இந்நாட்டிலும் (லண்டன்) பரப்புகின்ற சுவாமி சிவநந்தி அவர்களின் பணிகள் சிறக்க வேண்டுமென இறைவனைப் பணிகின்றோம்.

## இந்து கலாசா . . . .

(15ம் பக்க தொடர்ச்சி)

பணியும் எமது நன்றிக்குரியன. இவ்விதழின் சிறப்பிலே அவர்கள் மகிழ்வு காணுகிறார்கள்.

இறுதியாக இலங்கைவாழ் இந்துக்கள் மத்தியிலே இவ்விதழ் பரிச்சயமாகிவிடவேண்டும் என்பதிலே எமக்கு நிறைய ஆவல் உண்டு. வாசகர்கள் அளவிலும் பெருகி எமது பணி சிறக்க வாழ்த்த வேண்டும் என்றும் விழைகிறோம்.

ஆதலின், மாதந்தோறும் சிறுதொகை தந்து இப்பிரதியை வாங்குவதும், அல்லது சந்தாதாரர்களாகி எமது வளர்ச்சியை ஊக்குவிப்பதும், தங்களின் பேருதவியாக அமையும் என நம்புகின்றோம்.

பாரதி சொன்னதுபோல், நிதி மிகுந்தவர் பொற்குவை தாராவிடினும், நிதி குறைந்தவர் காசுகள் தந்து, அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளி, எதுவும் நல்கி இங்கு எவ்வகையாலும் இப்பெரும்பணி ஆற்றுவோம் வாரீர்.

நன்றி! வணக்கம்!

செயலாளர்,
இந்துகலாசார மன்றம்,
39/23, நெல்சன் ஒழுங்கை,
கொழும்பு-3

# அன்னம் சுத்தமா...

(16ம் பக்க தொடர்ச்சி)

ஹோட்டலில் சாப்பிடும்போது, பரிமாறுகிறவர் பரிந்து பரிந்து போடவில்லை என்பது ஒரு பக்கமிருக்க, சாப்பிடுகிறவனுக்கே இன்னும் கொஞ்சம் கேட்கக் கேட்க அதற்குப் பணம் கொடுத்தாக வேண்டுமே என்று கவலை இருக்கிறது. ஹோட்டல்காரர் சாப்பிடுபவர் இருவருக்கும் பைஸாவைப் பற்றிய கருத்தே முக்கியமாயிருக்கிறது அதோடு கூட நான் நிறையச் சாப்பிட்டால் பக்கத்தில் உட்கார்ந்து உண்பவர் என்ன நினைப்பாரோ என்று வேறு உண்பவருக்குக் கூச்சமாக இருக்கிறது. இதெல்லாம் தவிர 'ஹோட்டல் சரக்கில் என்னென்ன கெடுதல் இருக்குமோ? நிறையச் சாப்பிட்டு விட்டால் அது வயிற்றைக் கெடுத்து விடப் போகிறதே! என்ற பயம் வேறு. வயிற்றுக்கு வஞ்சனை இல்லாமல் நிறைந்த மனஸோடு சாப்பிடுவதே ஹோட்டலில் முடியாமல் இருக்கிறது. இதனாலெல்லாம்தான் சாதாரணமாக வீட்டில் ஐந்து, ஆறு இட்லி சாப்பிடுகிறவர்கள்கூட ஹோட்டலுக்குப் போனால் இரண்டு இட்லிக்கு மேல் சாப்பிடாமல் வந்து விடுகிறார்கள். உடம்புக்குப் போஷாக்கு தருகிற அளவுக்குக் கூட, ஹோட்டல் முதலான வெளியிடங்களில் சாப்பிட முடிவதில்லை. சித்த சுத்திக்கோ அது துளிகூட உதவுவதில்லை.

ஹோட்டலிலேயே (அல்லது அது போன்ற வெளி விடுதிகளிலேயே) சாப்பிட்டவர்கள், ஒரு வாரம் அல்லது பத்து நாள், நல்ல அக-புறச் சூழலில் தயாரித்த வீட்டுச் சாப்பாட்டை பந்துக்களோடு சேர்ந்து ஆனந்தமாகச் சாப்பிட்டால் தெரிந்து கொள்வார்கள். சித்தத்துக்கு எவ்வளவு தெளிவு பிறக்கிறதென்று

வீட்டிலேயே மனைவி பரிமாறுவதைவிடத் தாயார் பரிமாறும் உணவுக்கு விசேஷம் அதிகம்.

எல்லாவற்றையும் விட ஸ்வயம் பாகம்—சமைத்து சாப்பிடுவது.—அதி விசேஷமானது. நாம் நல்ல சித்த விருத்திகளோடு இருக்க வேண்டும் என்ற கவலை மற்ற எவரையும் விட நமக்கே தானே அதிகம் இருக்கும்? ஆனதால், சுத்தமான வஸ்துக்களாகவே கவனமாகப் பார்த்து எடுத்து, பகவந்நாமாக்களைச் சொல்லிக் கொண்டு நாமே சமைத்துச் சாப்பிடுவது என்ற பழக்கம் வந்து விட்டால். இந்த ஆஹார சக்தியால் சித்த சுத்தி பெறுவோம். "ஸ்வயம்பாகி"களுக்குத் தன்னால் உத்தமமான பண்புகள் ஸித்தித்து விடுகின்றன.

இதற்கு. நான் கண்கூடாகப் பார்த்த ஒரு உதாரணம் சொல்கிறேன்:

விந்திய மலைப் பகுதிக் காடுகளில் நான் யாத்திரை செய்து கொண்டிருந்தேன் நாங்கள் ஒவ்வொரு ராஜ்யத்து வழியாகச் செல்கிற போதும், அந்தந்த ராஜ்யத்துப் போலீஸ் கான்ஸ்டேபில்கள் எங்களுக்கு துணை வருவது வழக்கம்.

மத்யப் பிரதேசத்துப் போலீஸ்காரர்கள் தாங்களே தான் ரொட்டி செய்து சாப்பிடுவார்கள். நாங்கள் மடத்தில் சுத்தமாகத் தயாரித்து அவர்களுக்கு ரொட்டி கொடுக்கிறோம் என்று எவ்வளவோ சொல்லியும் கூட, அவர்கள் அதை ஏற்க மறுத்து, ஸ்வயம் பாகம் தான் செய்து கொண்டனர்.

விந்திய வனங்களில் எங்களுக்கு இவர்கள் தம்முதாவில் துணைக்கு வந்தவர்கள். பிற்பாடு உத்தரப் பிரதேசம் தொடங்கி விட்டது. ம. பி. போலீஸாரிடமிருந்து காவல் பொறுப்பை வாங்கிக் கொள்ள உ. பி. போலீஸ்காரர்கள் வந்தனர். அடுத்த முகாமிலிருந்து இவர்கள் 'சார்ஜ்' எடுத்துக் கொள்ள வேண்டும். அதுவரையில் இரண்டு ராஜ்யங்களின் கானஸ்டபிள்களுமே சேர்ந்து எங்களோடு வந்தனர்.

இரவு சுமார் பத்து மணி இருக்கும் எங்களுககு எதிரில் வன விலங்குகள் சஞ்சரிக்கத் தொடங்கின. உ. பி. கான்ஸ்டபிள் ஒருவன் தடியை வீசிக் கொண்டு அவற்றை அடிக்கப் புறப்பட்டான்.

"நீ யாரோடு போகிறாய் என்பதை நினைவு வைத்துக்கொள். ஸ்வாமிஜியோடு போகிறாய். எனவே, மிருகங்களை அடிக்காத. வெறுமே பயமுறுத்தியே அவற்றை அப்பால் மட்டும் விரட்டிவிடு" என்று சொன்ன அவன் தொடர்ந்தான்.

"உயிரினங்களிடம் நல்லெண்ணமே இருக்கட்டும் என்று இதன் அர்த்தம்.

என்மீது விலங்கு பாய்ந்துவிடப் போகிறதே என்ற கவலையில் தான் உ. பி. போலீஸ்காரன் அதன் மேல் தண்டப் பிரயோகம் செய்ய இருந்தான். அந்தச் சமயத்திலும் கூட, வாஸ்தவத்தில் அதைத் தடியால் ஹிம்ஸித்து விடாமல், தடியை ஆட்டியே விரட்டும்படி ம. பி. கான்ஸ்டபில் புத்திமதி கூறி, அவனைத் தடுத்தான். தடியால் ஒரு போடு போட்டிருக்க வேண்டியவன் சட்டென்று அதைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான். மிருகமும் ஓடிவிட்டது.

போலீஸ் படையில் இருந்தும்கூட இவ்வளவு அஹிம்ஸா சித்தம் அந்த மத்யப் பிரதேசக் கான்ஸ்டபிள்களுக்கு இருந்ததென்றால் அதற்கு அவனது ஸ்வயம்பாகம்தான் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது.

இன்று மக்களின் மனம் பல தவறான வழிகளில் சென்றிருப்பதற்குத் தூய்மைக் குறைவான உணவு ஒரு மிக முக்கியமான காரணம் இனிமேலாவது நாம் சீரிய சிந்தனையும், ஸத்வ குண வளர்ச்சியும் பெறும் பொருட்டு ஸாத்விக உணவுப் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.

நன்றி: இந்து தர்ம மன்ற ஆண்டுமலர்
சென்னை-1976

# இந்துக்களின் நிர்க்கதியான நிலை

— நாகன் ஹரிதாஸ் —

தொன்மைமிக்க இந்துமதத்தின் தாத்பரியங்கள் நடைமுறைக்கு ஏற்றாற்போல் மிகவும் அர்த்தபுஷ்டி களாக நமது மூதாதையரால் வகுக்கப்பட்டுள்ளது. அதன் தத்துவங்களும் கோட்பாடுகளும் காலத்துக் குக்காலம் புத்தொளி வீசி புதுமெருகுடன் புதுமை யாக நறுமணங் கமழுகின்றது.

நமது மூதாதையரோ தமது உயிரினும் மேலாக தமது மதத்தையும் கலாசாரங்களையும் போற்றிப் பேணி பாதுகாத்து வந்தனர் என்பது தொல்பொரு ளியல் ஆராய்ச்சி மூலம் நாம் கண்ட வெளிப்படை உண்மைகளாகும். இதனால் நமது இந்துமதமானது கோபுர விளக்காக எங்கும் பரந்து பல்கிய வண்ண மாக இருந்து வந்தது.



ஆனால், இன்றைய எமது சந்ததியினரோ அதற்கு முற்றிலும் முரண்பாடாக நடந்து கொள்கின்றனர். நாகரீகம் என நினைத்து அநாகரீக வாழ்க்கையில் உழன்று கொண்டிருக்கின்றனர். இதனால் பாரம் பரியமாக போற்றப்பட்டு வந்த எமது இந்து மதத் திற்கு இன்று விபரிக்க முடியாத அளவு இழப்புகளும் அதன் தன்மையும் நாளுக்கு நாள் குறைந்த வண்ண மாகிக்கொண்டிருக்கின்றது.

இந்த நிர்க்கதியான நிலைக்கு யார் காரணம்?

நாமே தான் காரணம், நமது மதத்தின் சில தலை வர்களும் தான் காரணம்.

சங்கம் அமைத்து தமிழை வளர்த்தனர் அன்று. இன்றோ சங்கம் அமைத்து சாதியை வளர்க்கின்ற னர். தலைநகரில் இன்று சாதியை வளர்ப்பதற்கு எத்தனை சங்கங்கள் உண்டு. அதனை வழி நடத்து பவர்கள் யார் யார் என்று அலசி ஆராய்ந்தால் எல்லாம் வல்ல இறைவனே பூவுலகத்தை விட்டே ஓடிவிடுவான் போலும்.

இன்று, சிலர் ஒவ்வொரு சங்கத்தையும், மன்றங் களையும், அமைப்புக்களையும் உருவாக்கி தானே அதன் தலைவராகவும் தான் இட்டதுதான் அதன் சட்டம் என்றும், தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்றும் தான் என்ற அகந்தையில் உலக மாயை யில் மயங்கி வாழ்கின்றனர்.

அடி மட்டத்தில் உள்ள ஏழை எளியவர்களை வெளி உலகிற்கு கொணராமல், அவர்களுக்கு குறைந்தபட் சம் அடிப்படை வசதிகளையாவது செய்து கொடுக் காமல், பணக்காரர்களுக்கு மத்தியில், யாகங்களை யும், கிரியைகளையும் மாத்திரம் செய்தால் கடவுள் கண் விழித்து விடுவாரோ? ஏழை மக்களை புறக் கணித்து பல இலட்சங்களை வாரி இறைத்து ராஜ கோபுரங்களாக கட்டினால் இறைவன் ஆலயத்தில் வந்து குடிபுகுந்து விடுவாரா?

அன்றில், பிராமணகுல மாத்திரம்தான் சமஸ்கிரு தங்களைக் கற்று, ஆலயத்தில் பூஜையும் செய்துவந் தால் தான் ஆண்டவன் தரிசனம் கொடுப்பாரா?

இது இந்து மதத்தின் சட்டமா? அல்லது
இந்துக்களின விதியினை நிர்ணயிக்கும் கால
தேசக் கண்ணாடியா?

எவனொருவன் விதிமுறைகளுக்கேற்ப, தனது மன சாட்சிக்கு எதுவித விரோதமுமின்றி, உண்மையான பதி பக்தியுடன் மந்திரங்களை சரியாக உச்சரிக்க தெரிந்தவனோ, அவனே தான் உண்மையான பக்தன். அவன் சொல்வதைத்தான் அந்த எல்லாம் வல்ல இறைவனும் கேட்பார். அவன் எந்த குலத்தவனாக இருந்தாலும் சரி.

குலம், கோத்திரம் எல்லாம் எம்முடன் கூடிப் பிறப் பது அல்ல. இடையில் வந்து எம்முடன் ஒட்டிக் கொள்ளும் ஒரு கௌரவப்பட்டம்தான் இந்த குலம் கோத்திரம் எல்லாம்.

எந்த குலத்தவனாயிருந்தாலும் சரி மூச்சு அடங் கியபின் சங்கமிப்பது எல்லாம் அந்த ''புனிதமான இடத்தில்தான்.

இவ்வகையான இழிநிலைகளால் தான் இன்று இந்து மதத்தவர்கள் தமது மதத்தையே வெறுத்து ஒதுக்குவதற்கு மூலகாரணமாய் அமைந்து விடுகின் றது. இந்து மதத்தவர் மத்தியில் மதம் மாறுவதற்கு முக்கிய கருவாகவும் இது அமைந்துவிடுகிறது என் பது யாவரும் அறிந்த உண்மை.

(22ம் பக்கப் பார்க்கவும்)

# இந்து பப்ளிகேசன்ஸ்

இந்துசமய, கலாசார நூல்கள், ஆலய வரலாறுகள், ஆன்மீக கட்டுரைகள் என்பவற்றை இந்து பப்ளிகேசன்ஸ் என்ற வெளியீடாக வெளியிட முன்வந்துள்ளோம் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தொடர்புகொள்க:
நிர்வாகி,
இந்துகலாசாரம்
39/23, நெல்சன் ஒழுங்கை
கொள்ளுப்பிட்டி
கொழும்பு 3.

**இந்துக்களின் . . .**

(21ம் பக்க தொடர்ச்சி)

இந்து மதத்தையும் கலாசாரத்தையும் கட்டிக் காத்து வளர்க்க வேண்டிய நமது தலைவர்களும், நாமும் இந்து மதத்தின் இன்றைய இழிமுறைகளுக்கு மூலகாரணமாக அமைந்து விடுவதோடு, அதனை அழிவுப்பாதையிலும் இட்டுச் செல்ல வழியை சமைத்து விடுகிறோம்.

''எவ்வளவு செய்கின்றோம் என்பதைவிட என்ன செய்தோம்'' என்பதை நினைத்துப்பார்த்து நாம் ஒவ்வொருவரும் இந்துத்தாய்க்கும், இந்து தாப்பனுக்கும் தான் பிறந்தோம் என்பதை கருத்தில் கொண்டு செயல்பட்டால், இந்துமதத்தை நாம் வளர்க்க வேண்டிய அவசியம் நிச்சயமாக ஏற்படாது அது தானாகவே வளர்ந்து விடும்.

# கோபுரம் கண்டு மகிழ்ந்தோம்

இந்து சமயத்திணைக்களத்தின் தகவல் பிரசுரமாக வெளிவரும் கோபுரம் வெளியீட்டின் ஆவிபாத இதழ் கண்டு மகிழ்ந்தோம்.

வழமைபோல, திணைக்களச் செய்திகள், பணி என்பவற்றோடு பல்வேறு வகையான அம்சங்களையும் கோபுரம் உள்ளடக்கியுள்ளது. இம்முறை ஒவ்வொரு ஆக்கமும், நிறையச் செய்திகளையும் கருத்துக்களையும் சுமந்து வருகின்றன. நாவலர் இலக்கியம், அறநெறிப்பாடசாலைகள் பற்றிய விளக்கம், ஆன்மீக விடயங்கள் என பல்வேறு பயனுள்ள அம்சங்கள் கோபுரத்தில் அமைந்துள்ளன.

— ஆசிரியர்

# இந்து கலாசார மன்றம்

(அரசாங்கத்தால் பதிவுசெய்யப்பட்டது)

காப்பாளர்கள்: மாண்புமிகு திரு எஸ் தொண்டமான் அவர்கள் (உல்லாசதுறை கிராமிய தொழில் அபிவிருத்தி அமைச்சர்), மாண்புமிகு திரு பி. பி. தேவராஜ் அவர்கள் (இந்துசமய கலாசார தமிழ் விவகார அமைச்சர்), திரு ஆர். விஜயபாலன் அவர்கள் வர்த்தகப் பிரமுகர், திரு டி. செந்தில்வேள் (வர்த்தகப்பிரமுகர்) திரு தெ. ஈஸ்வரன் அவர்கள் (வர்த்தகப்பிரமுகர்)

தலைவர்: திரு ஆர். வைத்தமாநிதி அவர்கள்

பொதுச்செயலாளர்: திரு ஏ. எம். துரைசாமி அவர்கள்.

பொருளாளர்: திரு எம். சதாசிவம் அவர்கள்.

இணைச் செயலாளர்கள்: திரு நா. ஹரிதாஸ் அவர்கள், திரு டி. முகுந்தன் அவர்கள்.

செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் ந. யோகசுந்தரம், ச. கனகசபாபதி, வி. இசக்கிமுத்து, செல்வி ஷிரியாணி இசக்கிமுத்து, திருமதி சண்முகம், செல்வி திலகவதி சதாசிவம், பி. வெள்ளையப்பன், கே. சின்னையா, திருமதி சுபாஷிணி சுதந்திரராஜன்.



சைவமுன்னேற்றச் சங்க இலண்டன் கிளையின் திருவாகஸ்தர்கள். இடமிருந்து வலமாக சங்கத் தலைவர் திரு சி. சிதம்பரப்பிள்ளை, உபதலைவர் திரு வ. இ பத்மநாதன், பொருளாளர் திரு வ. இராமநாதன், பொதுச்செயலாளர் திரு ஆனந்த தியாகர்.



## அரிவையர் அரங்கு

தயாரிப்பு: ஜெயா சாந்தி

# இந்துத் தாயின் தனிச் சிறப்பு

மக்களைப் பெற்றெடுப்பதும் நாளைய நற்பிரஜைகளாகப் பேணி வளர்ப்பதும் ஒவ்வொரு தாயினதும் தலையாய கடமையாகும். இன்றைய சூழ்நிலையில் பல பகுதிகளிலும் தம்நிலை புரியாது தட்டுத் தடுமாறித் தவித்துத் திரியும் சிறுவர்களையும் இளைஞர்களையும் காணும்போது இது ஒரு பணி என்ற கூறத்தோன்றுகிறது.

பெற்ற தாயின் கையிலேயே இந்து கலாசாரமும் தங்கி இருக்கின்றது. விளைநிலம் வளமாக அமைந்தால் விளைவும் சிறப்பாகத்தான் கிடைக்கும். ஆமாம் ''தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை'' என்று கூறியதன் அர்த்தம்தான் என்ன? தன் உதரத்திலே தாங்கிய மதலைக்கு உடலிலும் உணவிலும் பங்களித்துக் கருவிலே திருவமையப் பல தியாகங்களைச் செய்து துன்பங்களைத் தாங்கவேண்டி இருக்கிறது.

— மங்கையர்க்கரசி சிவலிங்கம் —

ஈன்றெடுத்த பின்னும் சிவமணங்கமழும் தன் உதிரத்தையே பாலாக்கிப் பங்கிட்டுக்கொள்கிறாள். மௌனமான நாம ஜெபமே பல வேளைகளில் துணை செய்கிறது.

மார்பிலும் தோளிலும் ஏந்தித் தொட்டிலிலும் கட்டிலிலும் இட்டுத் தாலாட்டிச் சீராட்டும்போதெல்லாம் பிள்ளைத்தமிழ் கொஞ்சுகிறது. பூவோடும் பொட்டோடும் கூடிய மஞ்சள் குளித்துக் குளிர்நத தன் தாயின் மலர்ந்த முகமும் கனிந்த ஆனந்தம் நிறைந்த உள்ளமும் பிள்ளையின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டுவிடுகின்றன.

இப்படி ஒரு பதிவு ஏற்பட்டுவிட்டால் பிற்காலத்தில் எந்தச் சக்தியாலும் மகவின் மனதை மாற்ற முடியாது. இன்று எத்தனை தாய்மார் இப்படி மனப் பதிவு ஏற்படும்படி அன்பு பொங்க தாய்ப்பாலூட்டித் தாலாட்டுப்பாடி, ஏனைய உல்லாசங்களைத் தவிர்த்துத் தம் வருங்காலச் செல்வங்களுக்காகச் சில மணி நேரங்களையாவது ஈடுபாட்டோடு கழிக்கின்றனர்?

வருவாய்க்காகவும் அந்தஸ்துக்காகவும், பிஞ்சுக் குழந்தை கதறியழ விட்டுவிட்டு ஓடினாலும் ஒழிந்த வேலையில் ஈடு செய்து, மழலையின் மனக்குறையை நீக்கிவிட்டாலே போதும். அது நாட்டுக்கே பெருஞ் சேவையாகும்.

தாய்தான் குழந்தையின் முதல் தெய்வம், முதல் உலகம், முதல் நண்பிகூட. பாலூட்டும்போதே புத்திசாலித்தனமாக பக்தியையும் ஒழுக்கத்தையும் புகட்டிவிடுவாள். தாய் தானே உணர்ந்து உணர்த்தும் வல்லமை கொண்டவள். தான் தாயாகிவிட்டதை உணர்ந்து பின் தந்தையிடம் கூறியதும் அவன் புரிந்துகொள்கிறான். எனவே பிற்காலத்தில் பிள்ளைக்குப் பேருணர்வைப் புகட்டிவிடும் சக்திவாய்ந்தவள் அன்னை.

வண்டிச்சில்லுக்கு அச்சாணிபோல அம்மா அனைத்துக் காரியங்களுக்கும் ஆதாரமாக இருந்து ஆக்கப்பாட்டு முயற்சிகளை ஊக்குவிக்கிறாள். தன் செல்வங்களின் ஒளிமயமான எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு தொலைநோக்கோடு அன்பையும் பண்பையும் வளர்க்கிறாள்.

அதிகாலையில் கோலமிட்டு ஈ — எறும்புக்கும் உணவளித்து குழந்தைகளுக்கும் பாடம் புகட்டுகின்றாள். தன்னையும் சுற்றம் சூழலையும் துப்பரவு செய்து நோயற்ற வாழ்வான குறைவற்ற செல்வத்தைக் குழந்தைகளும் கடைப்பிடிக்க கற்பிக்கின்றாள்.

உள்ளத்தில் உறுதியோடு யோக வாழ்வையும் பழக்குகிறாள். ஊனுறக்கம் விரத அனுட்டானம், பஜனை, தியானம், ஆடை அலங்காரம் அனைத்தையுமே அடக்கமாக அளவறிந்து தன் குடும்பத் தகுதிக் கேற்பப் பண்ணுகிறாள். பாத நமஸ்காரம் பழக்கி பணிவையும், கரதர்சனம் செய்து சுய முயற்சியையும் ஊக்குவிக்கிறாள்.

மனம் மொழி மெய்களால் மனிதமேம்பாட்டுக்கான மேலான பயிற்சியை முறையாகத் தருகிறாள். அதிகாலையிலேயே அம்மாவின் அமைதியான சுறுசுறுப்பான கற்பித்தல் ஆரம்பித்துவிடுகிறது. பொறுமை, இனிமை, சகிப்புத்தன்மை சேர்ந்த படிப்பித்தலில் குழந்தைகளும் ஒத்துழைத்து இசைந்து ஒன்றிப்போய்விடுகின்றனர்.

இறைபக்தியினாலே போதனையும் சாதனையும் சாத்தியமாகிவிடுகுன்றது. இதற்கு இந்துமதத்தில் பல சான்றுகள் உண்டு. பக்தப்பிரகலாதனும் நசிகேதனும் மார்க்கண்டேயருமே சாட்சிகள். சந்திரமணிதேவியும் மாயாதேவியும் போன்றோர் மகனையே மகானாக்கிக் காட்டினர். மகாத்மாகாந்தியும்

(தெர்ட்ர்ச்சி 28ம் பக்கம்)

# திருக்குறளும் திருமந்திரமும்

— சி. இராமநாதன் —

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் திருவள்ளுவரால் எழுதப்பட்ட திருக்குறள்கள் பல திருமூலர் எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் அருளிச்செய்த திருமந்திரங்களின் அடிப்படையில் உள்ளதாக அறியக்கிடக்கின்றது. அண்மையில் வாழ்ந்த தாயுமானவர் நந்திமரபு வாழ்க; மூலன் மரபு வரும் மௌனகுரு வாழ்க என்று வாழ்த்தியிருப்பதை எல்லோரும் அறிவர். திருவள்ளுவர் காலத்திலும் நந்தியின் சீடனான திருமூலரின் பரம்பரை அறுகு வேர் போல் தழைத்து இருந்ததை திருவள்ளுவரின் முதற் திருக்குறளிலேயே அறியக்கூடியதாக இருக்கின்றது.

''அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.''

இத்திருக்குறளின் ஆழமான தத்துவக் கருத்தை சிறிது ஆராய்வோம். அகர எழுத்து ஐந்தெழுத்தின் முதலெழுத்து. அதுவே ஆதிபகவன் முதலாயுள்ள இவ்வுலகத்தையும் அசைவு அசைவற்ற எல்லாப் பொருள்களையும் படைத்ததாக பின்வரும் திருமந்திரம் கூறுகிறது.

ஐந்தெழுத்தால் ஐந்து பூதம் படைத்தனன்
ஐந்தெழுத்தால் பலயோனி படைத்தனன்
ஐந்தெழுத்தால் இவ் அகலிடம் தாங்கினன்
ஐந்தெழுத்தாலே அமர்ந்து நின்றானே.

நிலம், நீர், நெருப்பு வாயு, ஆகாசம் முதலிய பஞ்ச பூதங்களையும் 8,400,000 விதம் விதமான உருவங்களையுடைய யோனிகளையும், பிரபஞ்சத்தில் இயங்கும் கோடிக்கணக்கான சூரிய சந்திர மண்டலங்கள் உட்பட எல்லா அண்ட சராசரங்களையும் தாங்கி நின்று ஐந்தெழுத்தாலேயே அமர்ந்து நிற்கின்றான்.

ஐந்தெழுத்தாய் விரிந்த முதலெழுத்தான அகார எழுத்தே ஆதிபகவனின் திருத்தாள், கருவில் மிதித்த கமலப்பாதமென்று பல திருமந்திரங்கள் கூறுகின்றன. அகாரம், இகாரம், உகாரம், ஓங்காரம், மகாரம் என்னும் ஐந்தெழுத்து சக்கரமே சூக்கும சொருபமான ஆத்மவஸ்துவாய் மெய்ப்பொருளாய், வேதப் பொருளாய் எல்லாத் தோற்றங்களிலும், வடிவங்களிலும் தலைவனாய் நிற்கின்றது. அகார எழுத்து பராசக்தியாய் பிரபஞ்சத்தைப் படைத்ததை பின்வரும் திருமந்திரம் கூறுகின்றது.

''ஆரும் அறியார் அகாரம் அவனென்று
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டும் தரணி முழுவதுமாய்
மாறி எழுந்திடும் ஓசையதாமே.''

அகார எழுத்தாகிய மூல வஸ்துவே அவனாய் நிற்கின்ற இறைவன். அவனின் சக்தியாகிய உகார எழுத்துக்கும் உகாரத்திலிருந்து மகார எழுத்துக்கும் மாறி எழுகின்ற 'ஓம்' என்னும் ஓசையே உயிர்களாய் பலப்பல உருவங்களாய் நிற்கின்றது. பின்வரும் திருமந்திரம் விளக்கமாகக் கூறுகின்றது.

''அகார முதலாய்அனைத்து மாய் நிற்கும்
உகார முதலாய் உயிர்ப்பு எய்தி நிற்கும்
அகாரம் உகாரம் இரண்டும் அறியில்
அகாரம் உகாரம் இலிங்கம தாமே.''

அகார உகார எழுத்துக்களில் இயங்கும் தத்துவப் பொருளே உயிர்க்கு உயிராய் ஆத்மாவாய் நிற்கும் ஆத்மலிங்கம். பின்வரும் திருமந்திரம் விளக்குகின்றது.

''தத்துவ மானது தன் வழி நின்றிடில்
வித்தகனாகி விளங்கி இருக்கலாம்
பொய்த்தவ மாமலை போயிடும் அவ்வழி
தத்துவமாவது அகார எழுத்தே''

ஆத்மா இயங்கும் அகார உகார வழியே தன் வழி எனப்படும். அருணகிரிநாதர் திருப்புகழில் நாத விந்துக்கள் ஆதி நமோ நமோவென்னும் உண்மையையே திருமூலர் கீழ்கூறும் திருமந்திரங்களால் விரிவாக விளக்குகின்றார்.

''மேல் வரும் விந்துவும் அவ் எழுத்தாய் விடும்
மேல் வரும் நாதமும் ஓங்கும் எழுத்துடன்
மேல் வரும் அப்பதி அவ் எழுத்தே வரில்
மேல் வரும் சக்கரமாய் வரும் ஞாலமே''

விந்து நாதத்தால் உண்டான ஐந்தெழுத்து சக்கரங்களே பிரபஞ்சத்தைதோற்றுவித்த காரணகர்த்தா திருமந்திரம் மேலும் கூறுகின்றது.

''ஞால மதாக விரிந்தது சக்கரம்
ஞால மதாய் விடும் விந்துவும் நாதமும்
ஞால மதாய் விடும் அப்பதி யோசனை
ஞால மதாக விரிந்தது எழுத்தே''

திருவள்ளுவர் ஆதிபகவானைக் கூர்ந்து, துதி செய்து,

''அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு''

எனும் குறளை முதன் முதலாக எழுதி தனது நூலை எழுத ஆரம்பித்திருப்பது வெள்ளிடைமலை.

●● வயதில் பெரியோர் எல்லோரும் எப்பொழுதும் ஒழுக்கத்திலும் பெரியோராகியிருப்பர் என்பது உண்மையன்று. வயதில் சிறியோர் எல்லோரும் ஒழுக்கத்திலும் சிறியோராய் இருப்பார் என்பதும் உண்மையன்று.

— சித்பவானந்தர்.

# சிந்துவெளி நாகரிகத்தில் சைவப்பண்பாடு

வடக்கில் ஜீலம், ஜீனாப், ராவி, பியாஸ், சட்லெஜ் என்னும் ஐந்து கிளைநதிகளும் பாயும் பரந்த பிரதேசம் ஐந்துநீர், பஞ்ச அப்பு என்றாகிப் பஞ்சாப் மாநிலமாயிற்று. அங்கே அருமையான ஆற்றோரங்களிலே நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகம் நிலவியது. அந்த நயத்தக்க நாகரிகம் கண்டவர்கள் திராவிடர் என்பது முடிந்த முடிபு. அக்காலத்தில் வேறு புலங்களிலிருந்தும் நாடோடிகள் நாட்டுள் புகவில்லை.

அந்த நாகரிக நகரங்களே இன்று வேற்றுமொழிப் பெயர்கள் என ஒலிக்கின்றன. மொகஞ்சதரோ, ஹரப்பா முதலியவை நாகரிகத்தில் உச்சநிலை கண்டவை. அங்கே படைபடையாகப் பல நகரங்கள் தோன்றி மண்மூடுண்ட சான்றுகள் உள்ளன. அங்கே அகழ்ந்தெடுக்கப்பெற்ற புதைபொருள்களில் சைவச் சான்று பகர்பவை மிகப்பலவாகும். சிவலிங்கப்பெருமான், அம்மை வடிவில் தாய்க்கடவுள், கூத்தபிரான் வடிவம், தட்சிணாமூர்த்தி வடிவம் என்னும் தென்முகக் கடவுள் முதலிய திருவுருவங்கள் உள்ளன. மக்கள் கடவுளைத் திருவுருவங்களில் வழிபட்டனர். எனவே அன்று உருவ வழிபாடு நிகழ்ந்தது. அவர்கள் அருவுருவநிலையையும், பலவாய உருவநிலைகளையும் நன்கறிந்திருந்தனர். ஆண்வடிவும் பெண் வடிவும் அருகருகே காணக்கிடைத்தமையின் அவர்கள் இறைவனைச் சக்திமானாகவும் சக்தியாகவும் கண்டனர். மான், புலி, மாடு முதலிய மிருகங்கள் நிமிர்ந்து நோக்க ஒரு மனிதவுருவம் இருத்தலில் அவர் பசுக்களுக்குப் பதியாய் இருந்தமையை மக்கள் அறிந்திருந்தனர் என்பது போதரும்.

இன்னும் பத்மாசனத்தில் பெரியவர் ஒருவர் குருமூர்த்தமாய் இருப்ப, இருபுறமும் மண்டியிட்டு வணங்கும் உருவங்கள், சீடரின் பாவனையில் இருக்கிறார்கள். அன்றே அங்கே குருசீடபாவனை நிலவியது என்பதற்குப் போதிய சான்று கிடைத்துள்ளது. இன்னும் நாசி நுனியை நோக்கியவாறு பெரியவர் இருக்கும் நிலை யோகாசனமாகும். அக்காலத்தவர் வழிபாட்டோடு யோகசாதனையும் செய்தவர் என்பது உறுதியாய் உள்ளது. ஆடல்வல்ல கூத்தப்பிரானின் சிலையொன்று உருக்குலைந்து கிடக்கின்றதெனக் கண்டவர் நடராச தத்துவத்தில் பஞ்சகிருத்தியத்தையும் அறிந்தவராவர்.

இன்றைய மிகப்பெரிய கோயில்களிலும் பார்க்க பெரிய கோயில் ஒன்று பாரிய தூண்கள் பலவும் முறிந்து கிடப்ப 20,000 சதுர அடிப்பரப்பு நிலத்தைக்கொண்டுள்ளது. இது பல்லாயிரவர் இருந்தும் நின்றும் வழிபாடு செய்த இடமாகலாம் எனக் கருதக் கிடக்கிறது. இன்றைய தென்னாட்டுக் கோயில்களின் மதில்களில் பன் நூற்றுக்கணக்கான நந்திகள் இருப்பதையொப்ப அன்று அங்கேயும் நூற்றுக்கணக்கான நந்திகள் இருந்தன என்பதற்கு உடைவுகள் வெளிப்படையாகக் கிடக்கின்றன.

இவ்வாறு சிவலிங்கங்களும் நந்திகளும் உடைபட்டுப் பரந்துகிடக்கும் பாரிய இடத்தில் சைவம் நிலவியது என்பது வெளிப்படை. இவையாவும் ஆரியர் என்னும் மக்கட்கூட்டத்தவர் இந்தியாவுள் காலடி எடுத்து வைப்பதன் முன்னரே உண்டாகி வழக்கில் வழிபாட்டில் நிலைபெற்றிருந்தன என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

நன்றி: இந்து நாகரிகம்.

# ஆலயவிழாவில் மாஸ்டருக்கு பொன்னாடை

மட்டக்களப்பு கல்லடி-உப்போடை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவ வைபவத்தின் போது கலைஞர் மாஸ்டர் சிவலிங்கத்துக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தனர். அன்னாரின் சமய, கலை, இலக்கிய சேவையைப் பாராட்டுமுகமாகவே பொன்னாடை போர்த்தப்பட்டது.

ஆலய உற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கலைவிழாவை மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ராஜேஸ்வரானந்தாஜி அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். வைபவத்துக்கு தலைமை வகித்த விநாயகர் ஆலய பரிபாலனசபைப் பிரமுகர் திரு எம். பிரசாத் அவர்கள் மாஸ்டருக்கு பொன்னாடைபோர்த்தி பாராட்டு வழங்கினார்.

கலைவிழாவில் வில்லுப்பாட்டு, தாளலய நாடகம், பரதநாட்டியம், குட்டிநாடகம், கதாப்பிரசங்கம் முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

கல்லடி-உப்போடை விவேகானந்த மகளிர் மகா வித்தியாலய மாணவிகள் பங்குபற்றிய வில்லுப்பாட்டு, தாளலய நாடகம், குட்டி நாடகம் ஆகியவற்றை மாஸ்டர் சிவலிங்கம் அவர்களே எழுதித் தயாரித்தளித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வறுமைக்குத் திறவுகோல் சோம்பல்; வளமைக்குத் திறவுகோல் சுறுசுறுப்பாயிருத்தல்.

— ஜான் ரே.

# ஆடி அமாவாசையில் ஆன்மா ஈடேற்றம் பெறும்

— எஸ். தெய்வநாயகம் —

இந்துக்கள் வருஷத்தை இரண்டு காலங்களாக வகுத்து உத்தராயணகாலம், தஷிணாயனகாலம் எனக் கொண்டு கருமமாற்றுகின்றனர். உத்தராயணகாலம் தைமாதம் தொடங்கி ஆனிமாதம் வரை உள்ளது. தஷிணாயனகாலம் ஆடிமாதம் ஆரம்பித்து மார்கழியுடன் நிறைவு பெறுகின்றது. இந்த தஷிணாயன காலத்தில், சூரியன் தெற்கு நோக்கி சஞ்சரிக்க ஆரம்பிக்கின்றான். இதனால் சூரியனின் முழுப்பயனையும் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. இத்தகைய சிறப்புவாய்ந்த தஷிணாயனகால தொடக்க ஆடி மாதத்தில் ஆடிப்பிறப்பு, ஆடிச்செவ்வாய், ஆடிஅமாவாசை, ஆடிப்பூசம் என்பன போன்ற இந்துக்களின் திருநாட்கள் விரதங்களாகவும், வினைகளைப்போக்கும் நாட்களாகவும் கணிக்கப்பட்டு பேறு பெறுகின்றன.

எல்லா மாதங்களிலும் அமாவாசை வந்தாலும் கூட ஆடிமாதத்தில் வரும் அமாவாசைதினம் ஒரு புண்ணியமிக்க தினம் எனக் கூறலாம். எம்மை உருவாக்கி, இந்த உலகத்தைவிட்டு மறைந்த எம் தந்தையின் ஆன்மா எங்கிருந்தாலும் நன்னிலையடைய பிதிர் தர்ப்பணம் செய்யும் சிறப்பு மிகுந்த நாள் எனக் கூறலாம். அன்னையை இழந்தவர்களுக்கு சித்திரா பௌர்ணமி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ, தந்தையை இழந்தவர்களுக்கு ஆடி அமாவாசை மிகவும் புண்ணியத்தை அளிக்கக்கூடியது.

'அமா' என்பது ஓரிடத்தில் பொருந்தியது, குவிந்தது, அடுத்தது என்ற பொருள் தருவதாகும். ஒரு இராசியில் சூரியன், சந்திரன் இருவரும் சேர்ந்து உறவாடும் வாசியான நாள் அமாவாசை எனப்படும். சூரியனும் சந்திரனும் ஆற்றல் மிக்கவர்கள். சூரியன் ஆத்மகாரகன், ஞானகாரகன். சந்திரன் மனதிற்கு அதிபதி. ஆற்றல் மிக்க இருவரும் ஒரு இராசியில் சஞ்சரிக்கும் தினம் புனித தினமாகக் கொள்ளப்படுகின்றது. மேலும் சகல தேவர்களும் அமாவாசை தினத்தின் அதிபர்கள். அன்று நோன்பு நோற்றல் விரதம் காத்தல் இறைவன் அருளை — பிரீதியைப் பெற பேருதவி அளிக்கின்றன.

அமாவாசையில் புண்ணிய தீர்த்தத்திலே படிந்து பிதிர் தருப்பணம் செய்து அதிதிகளோடும், சுற்றத்தாரோடும் உண்டு விரத நியமத்துடன் இருப்பது தீர்த்த சிரார்த்தம் எனவும் காமிகசிரார்த்தம் எனவும் படும். மரணத்தின்போது தூலசரீரம் (உருவுடம்பு) அழகிய சூக்கும சரீரம் (அருவுடம்பு) பெறும் உயிர் பூமியில் செய்த வினைகளுக்கேற்ப இன்ப துன்பங்களை சுவர்க்க நரகத்தில் அனுபவிக்கும் என்பது இந்துக்களின் அசையாத நம்பிக்கை. அனுபவித்துத் தொலையாது எஞ்சிநின்ற பிராரத்துவ வினைகளினாலேயே உயிர் மீண்டும் பிறப்பெடுக்கின்றது.


அந்தியேட்டி, தகனக்கிரியைகளால் அபுத்திபூர்வமாகச் செய்த வினைகள் மாறும். புத்திபூர்வமாகச் செய்தவைகளை அனுபவித்தேயாக வேண்டும். பிதிர் வழிபாடு அவ்வினையின்முனைப்புதேய்தற்பொருட்டு புத்திரரால் செய்வதாகும். பிதிர் தேவர்கள் புத்திரர் செய்யும் பிதிர் தருப்பணத்தை ஏற்று பிதிரர் எப்பிறவியில் உள்ளனரோ அப்பிறவியில் செலுத்தி பயனடையச் செய்வர். அப்படி இறந்த தந்தையின் ஆன்மா பயன்பெறும் நன்னாளே ஆடிஅமாவாசை தினமாகும்

சைவர்களும் வைணவர்களும் ஆடிஅமாவாசை தினத்தை முக்கிய தினமாகக்கொள்வர். இத்தினத்தில் தந்தையை இழந்தவர்கள் அவர் ஆத்மா சாந்தி பெற நிகழ்த்தும் பிதிர்க்கடன் பூரண பலனைத் தரக்கூடியதென்பது சாத்திரவிதி. வெற்றிக்கொருநாள் அமாவாசை என்றும் கூறுவர். பூரண அமாவாசை வெற்றியை அளிக்கக்கூடியது என்ற நம்பிக்கை ஆதிகாலம் தொட்டே இருந்துவந்தது என்பதற்கு, பாரதப்போரில் துரியோதனன் அமாவாசை தினத்தில் களப்பலி கொடுத்தது சான்று பகர்கின்றது போருக்கு வெற்றிதரும் நாள் அமாவாசை எனவும் சொல்வர்.

இந்திரன், இராகு, அகத்தியர், பிரமா, இராவணன், இராமன் போன்றோர் இந்த ஆடி அமாவாசை விரதம் அனுட்டித்து மிகுந்த பலனடைந்தார்கள். இலங்கைத் திருநாட்டிலே திருக்கேதீஸ்வரம், மாமாங்கேஸ்வரம் நகுலேஸ்வரம் (கீரிமலை) முதலிய திருத்தலங்களில், ஆடி அமாவாசை நாளில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஒன்றுகூடி பிதிர் தர்ப்பணம் செய்வதை இன்றும் காணலாம். தந்தையைப்போல் உலகில் தெய்வம் இல்லை. தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். எனப் பலவகையிலும் புகழ்ந்துரைக்கும் சான்றோரின் முதுமொழிக்கிணங்க எம்மை இந்த உலகத்தில் உருவாக்கிவிட்டு மறைந்த நம் தந்தையின் ஆன்மா எங்கிருந்தாலும் நன்னிலையடைய பிதிர் தர்ப்பணம் செய்யும் இந்த ஆடி அமாவாசை நாளை நாம் புண்ணிய தினமாகப்பேணி விரதம் அனுட்டித்து, பிதிர் தர்ப்பணம் செய்து நினைவுகூருவது சாலச்சிறந்தது. ஆடிமாதமும் புரட்டாதிமாதமும் பிதிர்தர்ப்பண மாதங்கள் எனவும் கூறுவர். இறந்த மாதத்தில் பிதிர்க்கடன் கிரியை செய்யமுடி

(தொடர்ச்சி 30ம் பக்கம்)

# கலியுகத்தில் கடவுளின் கருணை பெற பஜனைவழி



— ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தஜி —

(நல்ல குருநாதன் என வழங்கித் திருக்கோண மலையில் சிவயோக சமாஜத்திலும், பன்குளத்துக் குடிலிலும், நடராஜபுரத்திலும் ஐரோப்பியர் பலரை ஆட்கொண்டு, எம்மவருக்குப் பக்திநெறி அறிவித்து பலநூல்கள் படிக்கவைத்துச் சித்தமலம் நீக்கிய சிவனேயென வாழ்ந்தவர் சுவாமிகள். தமிழரின் நுண் கலைகளை சிவயோக சமாஜத்தில் இருந்தவாறே உலகறியச் செய்தவர். அவர் கடைசியாக அருளிய உபதேசம்)

நாதலய யோகம் அல்லது நாம பஜனை என்பது பக்த ஜனங்களுடைய சித்த விருத்திகளை இருதய மருதமான ஆத்ம நாதத்தில் லயப்படுத்தி ஒடுக்குவதற்குரிய ஒரு லலிதமான ஆத்ம சாதனை.

எய்யும் அம்பு கூரியதானால் குறியில் ஆழமாய்த் தைப்பதுபோன்று கூர்மையான மனம் உடையவர்களால்தான் இறைவன் என்ற குறியைத் தவறாமல் அடையமுடியும்.

மனோலயம் அதில்தான் மனம் ஒடுங்கிக் கூர்மை பெறுகின்றது. தீட்சா முறைகளும் கடினமான சாதனைகளும் இன்றி பாலர்களில் இருந்து வயோதிபர்கள் வரையும் பாடிப் பாடியவாறு மனம் இறைவன் பால் லயித்து ஒடுங்குவதற்கேற்ற எளிதான மார்க்கந்தான் பஜனை.

சர்வசராசரங்களிலும் ஒலிக்கின்ற ஓம் என்ற பிரணவ சத்தத்தை நாதம் என்றழைக்கின்றோம். பிராணிகளை உயிர்ப்பிக்கின்ற இந்த நாதம் மனிதருடைய மூலாதாரத்திலிருந்து உச்சிக்கமலம் வரையில் இருக்கும் சுழு முனை துவாரம் வழியில் அமைந்து ஆறு ஆதார சக்கரங்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான ஒலிபேதங்களுடன் ஒலிக்கின்றன.

சக்கரங்கள் என்றால் சில்லுகள் என்று அர்த்தம். வாகனம் ஓடுவதற்கு சில்லுகள் எவ்வாறு பயன்படுகின்றனவோ அவ்வாறே சரீரமாகிய வாகனத்தின் போக்கு வரவுக்கு இந்த ஆறு சில்லுகளும் ஆதாரமாயிருக்கின்றன.

## பிரதான சக்கரம்

ஆதார சக்கரங்களில் பிரதானமானது ஹிருதய ஸ்தானத்தில் அமைந்திருப்பதாகிய அனாகதச் சக்கரம். சப்த சுத்திச் சாஸ்வமாகிய அனாகதச் சக்கரத்தில் நின்று எழும் ஹ்ரீம் (HREEM) என்ற அனாகத நாதத்தில் மனதை லயப்படுத்தினால் தேனுண்டு வண்டு மலரின் மணத்தில் அக்கறையிருப்பது போன்று சாதகனுடைய மனம் பிரபஞ்ச வாசனையற்று வர்ணாதீதமான அனாகத நாதசுகத்தில் சதா லயித்திருக்கும்.

பரம சுகமுடைய இந்தத் திவ்விய நாதசுவையில் ஒரு குறிக்கப்பட்ட நேரம் மனம் லயிக்குமேயானால் நாதத்தின் உள்ளேயிருக்கும் இறையொளியாகிய உள்ளொளி சாதகனுடைய மனக்கண்ணில் ஒளிரும்.

பிரார்த்த கர்ம வினைகளைத் தீர்த்து ஜீவனை ஜீவன் முக்தனாக்கும் இறையொளி தரிசனந்தான் நாதலய யோகமாகிய நாமபஜனையின் குறிக்கோள்.

செவிப்புலனாகாததும் ஒடுங்கிய மனதால் மாத்திரம் கிரகிக்ககூடியதுமாகிய அதிசூக்குமமாகிய அனாகத நாமத்தைக் கேட்டு அதில் மனதை லயப்படுத்துவதற்கு இரண்டு விதமான சாதனா மார்க்கங்களிருக்கின்றன.

ஒன்று குண்டலினியோகம், மற்றது நாதலய யோகமாகிய நாம பஜனை.

(தொடர்ச்சி 33ம் பக்கம்)

11088

# மறைவாக நமக்குள்ளே !

நாட்டின் சிலபிரதேசங்களைத் தவிர, ஏனைய பகுதிகளில் எல்லாம் ஆலயங்கள், புதிய பொலிவுடனும், அழகுடனும் செழித்தோங்கி வருகின்றன. கும்பாபிஷேகங்கள், திருவிழாக்கள் உற்சவங்கள் என்று மக்கள் குழுமுகின்றார்கள். இனம்புரியாத ஒரு ஈர்ப்புச் சக்தியினால் ஆலயத்தை நோக்கி மக்கள் ஈர்க்கப்படுவதையும் நாம் மறுப்பதற்கில்லை.

இவற்றுக்கிடையில் எழுகின்ற சில சந்தேகங்களையும் நாம் சிந்தித்தாக வேண்டும். உண்மையாகவே ஆலயங்களிலிருந்து மக்கள் மனங்களுக்கு ஒழுகிவரவேண்டிய ஆன்மீக சக்தியை மக்கள் உணருகின்றார்களா? அந்த நோக்கில் ஆலய பரிபாலனம் நடக்கின்றதா?

நகர்ப்புறங்களில் உள்ள பெரிய பெரிய ஆலயங்களும், கிராமங்களிலும், தோட்டப் பகுதிகளிலும் உள்ள சிறிய பெரிய ஆலயங்களும் நிதியை ஒரு பிரச்சனையாக நோக்கி நகர்வதை நாம் அவதானிக்க முடிகிறது. சில ஆலயங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கின்றது. நிரந்தர சேமிப்பாகவும் நிறையப் பணம் இருக்கிறது. இதேபோல சிறிய ஆலயங்களும் தமது மண்டபங்கள், திருவிழாக்கள் என்பவற்றை விசாலித்துக் கொண்டுவருகின்றன.

— நாதன் —

எவ்வாறேனும் நிறைய வருமானம் வருகின்ற ஆலயங்களை நிர்வகிப்போர்—பரிபாலனம் செய்வோர்—எந்தளவு இதய சுத்தியுடன் செயல் படுகின்றார்கள் என்பது கேள்விக்குறிதான். ஆலயத்தின் அத்தியாவசியத் தேவைகள் கருதி உண்டியல் என்ற நிலைமாறி உண்டியலுக்காகவே ஆலயம் என்ற நிலை வளர்ந்து வருகிறது.

உண்டியல்—பணம் என்றதுமே ஊழல்—சண்டை என்ற நிலை உருவாகி விட்டது. உண்டியல் சண்டையை நீதி மன்றத்துக்கு கொண்டுபோய்விட்ட ஆலயங்களும் உள்ளன. ''எனது கோயில்'' எனது ''பரம்பரைக் கோயில்'' என்கின்ற புண்ணியவான்கள் கோயிலுக்கு வருகின்ற வருமானத்துக்கு கணக்கு சொல்வதாக இல்லை. அது அந்த மூல மூர்த்திக்கே வெளிச்சம்.

நிதானமாக சிந்தித்துப்பார்ப்போம் இவ்வளவு திருவிழாக்கள், கும்பாபிஷேகங்கள் புதிய புதிய பூஜைகள், யாகங்கள் என்றெல்லாம் நடக்கின்றபோதும், அனர்த்தங்களும் துன்பங்களும் குறைந்திருக்கின்றனவா? இல்லையென்றால் காரணத்தை அவரவர் மனங்களே உணரவேண்டும். கறைகளோடு கோயில் தொண்டு தெய்வதோடு விடவும் நாஸ்திகம் பேசி நேர்மையுடன் வாழ்வது நல்லது.

சங்கை ஊதிவிட்டோம்! சத்தம் கேட்டால் சரி!

# வரவைப்பாய் !

கெங்காதரா வந்து கிடைத்தாரா யாம் விடுத்த
கெங்காதரானந்தர்? கிடைத்தார்க்குச் சிற்றோய்வு
கிடைத்திடவே செய்திடுக! கேட்டிடுக செய்தவையை
படைத்திடவே மீண்டுமிவண் பார்த்திடுக ஓர்வழியை
ஏனென்றால் சிவயோகத் தேங்கள் சமாசத்தின்
ஊனாகி உயிராகி உள்ளாகி வெளியாகிச்
செய்த திருப்பணிகள் தீராமல் உள்ளதனால்
உய்ந்தோர் பலருடனே உய்வோரும் உள்ளதனால்
காத்திருக்கும் மக்களுக்குக் கனகாலம் போமளவும்
பார்த்துச் சுணக்காமல் பழைய மலைப்பதியில்
மீண்டும் வரவைப்பாய்! மிகவும் பணிவன்பாய்
வேண்டினோம் வேண்டும் வினை!

— தாமரைத்தீவான்

(23ம் பக்க தொடர்ச்சி)

## இந்துத் தாயின் . . .

சுவாமி விவேகானந்தரும் ஆறுமுகநாவலரும் சுவாமி விபுலானந்தரும் பெற்றெடுத்துப் பேருணர்வூட்டிய இந்து அன்னையரின் பெருமையை அவனறியச் செய்த பெருமக்களாவர்.

அன்னை என்பவள் வெறும் சுமைதாங்கி அல்ல இட்டபணியைச் செய்யும் இயந்திரமுமல்ல. சிந்தித்துச்செயற்படும் சீரிய அறிவுச் சுடர் அவள். அன்பாக அரவணைத்துப் பண்போடு பல பாடங்களை புகட்டிப் பயிற்சியும் அளிக்கும் ஆரம்ப ஆசிரியையும் ஆவாள். சிந்திக்கவும் வந்திக்கவும் சின்ன வயதிலேயே பழக்கிவிட்டால் உலகம் உவப்ப இணங்கி வாழும் பண்பு உரிய காலத்தில் ஓங்கி வளரும்.

உண்மை அன்பை வளர்க்க ஓயாது உழைப்பவள் பெற்றெடுத்த தாய். ஆரம்ப ஆசிரியையாக அறநெறியை அறிவுறுத்தி, ஆக்க முயற்சிகளில் ஈடுபடுத்தி, இனிய முறையில் பேசி, ஈகைப் பண்பை முன்வைத்து, உயர்வை நாடி ஊக்கமுடையார் எல்லாமுடையார் என்பதுணர்த்தி, எங்கும் எப்பொழுதும் எல்லோர்க்கும் நன்றே செய்து, ஏணிபோல எவருக்கும் ஏற்றம் காட்டி மேலான எண்ணங்களை ஊட்டி, ஐயம் தீர்த்து, ஏன் ஏன் என்ற கேள்விகளுக்கு உடனுக்குடன் பொருத்தமாக பதில் கூறி சாதுரியமாக அறிவின் அத்திவாரத்தைப் பலப்படுத்துபவளும் அன்னையே.

ஆர்வமாக ஒழுக்க சீலத்தை கடைப்பிடிக்க முன்மாதிரியாக வழிகாட்டி, ஓதுவதொழியேல் என்றபடி கிரமமாக மீட்டல் செய்வித்தாலும் ஔடதம் போலிருந்து புன்னகையோடும் விருந்தோம்பலோடும் மருந்து மந்திரமும் அவளுக்கு அத்துப்படி. தமிழுக்கு உயிரெழுத்துப் போலத் தன் சந்ததிக்குத் தாய் தனிச் சிறப்போடு விளங்குகிறாள்.

# நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

— செல்வி ஆர். கமலராணி, பலாங்கொடை —

மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொருவனும் ஏதோ ஒன்றுக்குப் பயப்படவே செய்கின்றான். எந்த நேரத்தில் தனக்கு, தன் உடமைகளுக்கு யாரால், எப்படி தீங்கு விளையுமோ என்று பயப்படுவது மனித இயல்பு. ''நானென்றால் ஒன்றுக்கும் கொஞ்சக்கூடப் பயமில்லை'' என்று பெருமையடித்துக் கொள்பவனும்கூட, தனது பயத்தை வெளிக்காட்டவில்லையென்று சொல்லலாமேயொழிய, பயப்படவில்லையென்று சொல்லமுடியாது. ஏனென்றால் ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் அவனது இதயம் பயத்தினால் துடிக்கும் துடிப்பு அவனுக்குத்தான் தெரியும். சாதாரண பயமே இவ்வாறிருக்கும்போது மரண பயம் யாரை விட்டுவைக்கப்போகிறது. மாபெரும் வீரர்களும்கூடத் தம் இறுதிநேரத்தில் கலங்கிவிடுவர். ஏனெனில், இன்றுவரை விஞ்ஞானத்தின் பிடிக்குள் அகப்படாமல் ஒரு இரகசியம் இருக்கின்றதென்றால் அது மரண இரகசியம்தான். அத்தகைய ஒரு தனிமைப்பிரயாணத்துக்கு ஆரம்பமாகின்ற இறுதிக்கட்டம் எவரையும் நடுங்கவைக்கக்கூடியது.

## நெஞ்சுத்துணிவு யாருக்கு வரும்

நாம் ஏதாவது ஒரு ஆட்சிக்குக் கீழ்ப்பட்டே வாழ்க்கை நடாத்துகிறோம். அது ஜனநாயகமாயிருந்தால் என்ன, அல்லது வேறெந்தப் பெயரில் இருந்தாலும்தான் என்ன ஏதோ ஒன்றின் குடிகள் தான் எல்லோரும். உண்மை நிலைமை இவ்வாறு இருக்கும்போது நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம் என்று யாரால் மார்தட்டமுடியும், அத்தகையதொரு நெஞ்சுத்துணிவு யாருக்கு வரும் என்று பார்த்தால், அது நிச்சயமாக எல்லா உலகங்களின் தலைவனாக அருளாட்சி செய்பவனும், காலனுக்கும் காலனாக விளங்குபவனுமாகிய இறைவனது அடியார்களுக்குத்தான் வரும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

## கவலைப்படுவதே மனித இயல்பு

அத்துணிவு அவர்களுக்கு எப்படி வந்தது? எப்படியென்றால் துணிவின் பிறப்பிடம் எதுவோ அதிலேயே அவர்கள் அடைக்கலம் புகுந்துவிட்டதால் தான் வந்தது பரமசிவனின் கழுத்திலுள்ள பாம்பு கருடனைப்பார்த்து சௌக்கியமா என கேட்குமள விற்குத் துணிவு பெற்றுவிடுமானால் முற்றுமுழுக்கத் [illegible]ங்களை இறைவனிடம் சமர்ப்பித்துவிட்டவர்கள் பயப்படவா போகிறார்கள். அதுதான் அவர்களின் துணிவு.

ஆனால் சாதாரண மனிதர்களாகிய எம்போன்றவர்களின் நிலையே வேறு. இறைவனின் அடிமைக [illegible]

டும் எவ்வாறு சொல்லமுடியும்? எந்நேரமும் தம்மையும் தமது உடமைகள் குறித்தும் கவலைப்படுவதே மனிதர்தம் தொழிலாகிவிட்டது. கவலைப்படுவதனால் எவ்விதப் பயனுமில்லை என்பது நன்கு தெரிந்தாலும்கூட, கவலைப்பட்டுக் கவலைப்பட்டுக் கடைசியாக விதியை நொந்துகொள்வதுதான் மனிதவாழ்க்கையாகும். ''அவனுக்குத்தான் தெரியும் ஒரு ஆரம்பமும் அதன் முடிவும்'' என்று நாம் நினைப்பதில்லை. அதனால் நாம் நினைத்தது நடக்காதபோது அல்லது எதிர்பாராமல் ஏதாவது சம்பவிக்கும்போது நிலைகுலைந்து போகின்றோம். நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வமில்லையல்லவா. கண்ணதாசன் சொன்னதுபோல் பாதை என்னுடையது, பயணமோ அவனுடையது. வழியை நான் அமைத்துக்கொண்டாலும்கூடப் பயணத்தை அவன்தான் திட்டமிடுகிறான்.

## சுமைகளிலிருந்து விடுபடுவோம்

எல்லாம் நம் கையில் என்று நினைத்துக் கொண்டு எந்நேரமும் அஞ்சி அஞ்சிச் சாகின்றோம். ஆகவே ஓரளவாயினும் பயமின்றி நாம் வாழவேண்டுமானால் பயமற்றவனது பாதங்களைப் பற்றிக் கொள்ள வேண்டும். பற்றுவது மட்டுமின்றிப் பரிபூரண சரணாகதியடையவும் வேண்டும். அப்போது தான் நாம் எம்மைப்பற்றிப் பயப்படாமல் இருக்க முடியும். ஐம்பூதங்களும் அவன் அடியார்க்கு அடங்கிவிடும். நவக்கிரகங்களும் இறைவனின் அடியாரை நெருங்கவே பயப்படும். யமனோவென்றால் ஈசனடியாரைப் பயப்படுத்தமாட்டான். இதுதான் மிகமுக்கியம். காலகாலனுக்கு ஆட்பட்டுவிட்டபின் காலனுக்கு அஞ்சவேண்டியதில்லை. இந்தப் பயனையெல்லாம் எண்ணியெண்ணி அவனுக்கு ஆட்படத் தேவையில்லை. தன் அடியார்களுக்கு நேரப்போகும் எவ்வித ஆபத்தையும் வருமுன் விரட்டிவிடுவது பொறுப்பெடுத்தவன் கடமையல்லவா. ஆகவே பொறுப்பை அவனிடம் கொடுத்து பாவங்கள் சுமைகளிலிருந்தும் விடுபடுவோம்.

அரசர்க்கெல்லாம் அரசனான பேரரசனுக்கு ஆட்பட்டபின் வேறு யார்க்கும் அடிமைப்படவேண்டியதில்லையென்ற நெஞ்சுத்துணிவுதான் அவ்வாறு வாய்ப் பேச்சாகியது. அது மட்டுமா?

வானம் துளங்கிலென் மண்கம்பமாகிலென்
-மால் வரையும்
தானம் துலங்கித் தலைதடுமாறிலென் தண்
-கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை
[illegible]

# எனதன்பு இந்துகலாசார நண்பா!

என்றோ ஒருநாள் எதிர்பாரா விதத்தினிலே
உன்னைநான் சந்தித்தேன் சமய அறிவைப்
பெருக்கிவிட உன்மீது நாட்டம் கொண்டேன்
உன் உள்ளச் சுவைகளைக்கண்டு நான்
வியந்தேன், மகிழ்ந்தேன், பெருமையுற்றேன்!

உன்நாட்டில் இப்படியொரு மஞ்சரியா!
என்று நான் ஏங்குகின்றேன்
புதிய பல எழுத்தாளர்களை உருவாக்கும்
தன்பணி தொடர்வது ஓர் இமாலயச் சாதனை தான்
உன் ஈராண்டு நிறைவை ஏந்தி வரும்!

சிறுமலரைக் காண தமிழ் கூறும் நல்லுலகத்தார்
பெருமை கொள்வர் என்பதிலே ஐயமில்லை
என்னுள்ளந் தனில் இடம் பிடித்துவிட்ட
இந்து கலாச்சார திங்கள் இதழே
உன்னைநான் எப்படித்தான் பாராட்ட!

தை மாத இதழையே நான் முதலில் கண்டேன்
எமதன்பு ஆசிரியர் துரைசாமி வள்ளலது
பயணக் கட்டுரையே மிக்க இனிது
இது என்றும் தொடருவதே என் ஆசை
சபரிமலை யாத்திரையும் தேன் சொரிந்து நின்றதனில்

மாசித் திங்களினை கண்டவுடன் ஓ என்றே
அழுதுவிட்டேன் எமதன்பு குருநாதாவின்
மறைவுச் செய்தியினை அறிந்தவுடன்
பல ஞானநூல்களையும் ஆன்மீக உலகிற்கு
விதைத்து வேரூன்றச் செய்தவர் எம் — குருநாதா!

பங்குனித் திங்களும் எம் அருட்துறவியின் புகழ் ஏந்தி
மலர்ந்ததுவே! அத்துடன் நிற்கவில்லை
எமதன்பு எழுத்தாளரின் சமாஜமும் நாம பஜனையும்
எம் உள்ளந்தனை கொள்ளைகொண்டு விட்டதடா
குருநாதாவின் பஜனைப்பாடலுமே சிறந்து விளங்கின

சித்திரையாள் வந்தவுடன் எனக்கு மிக சந்தோஷம்
ஏனென்று கூறமாட்டேன் புரிந்து கொள்ளுங்கள்
அது மட்டுமே எமது வரலாற்றுத் திருப்புமுனை
கண்டி நகரில் கொடிகட்டிப் பறந்ததுவே
இதனை வாசித்துப் புரிந்து கொண்டேன்!

இவையாவும் நான் பெற்ற நூல்களிலே
சுவைத்து அறிந்தவையே! இதுபோன்று என்றும்
எனதன்பு நண்பன் நித்தம் தொடர்ந்து வந்து
இங்கிதமாய் மலர வேண்டுமென்று — நான்
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

— ராஜ புவனா

ஆடி அமாவாசையில் . . .

(26ம் பக்க தொடர்ச்சி)

யாது. போனவர்கள், இறந்தவர்களுக்காக இந்த இரு மாதங்களிலும் செய்யும் பிதிர்க்கடனை பிதிர் தேவர்கள் ஏற்று உரிய ஆன்மாக்களிடம் சேர்ப்பிப்பர் என்பது ஞானிகளின் கூற்றும் நம்பிக்கையுமாகும்.

இத்தகைய சிறப்புவாய்ந்த ஆடி அமாவாசை 9 8-91 வெள்ளிக்கிழமை வருவது மிகவும் புனிதமானது. இப்பொன்னாளை இந்துக்களாகிய நாம் நன்னாளாக ஏற்று, விரதம் இருந்து எம்முன்னோர் ஆன்மா நன்னிலை பெற பிதிர் தர்ப்பணம் செய்வதோடு, நம் தந்தைக்கு ஆற்றும் சிறந்த பணிக்குரிய நாளாகக்கொண்டு அவர் ஆன்மா ஈடேற்றம் அடைய பிதிர் தர்ப்பணம் செய்து, பூஜித்து வழிபாடு செய்தால் இப்பிறவியில் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் வினைகள் அகல ஆடி அமாவாசை தினம் வழிசமைக்கும் என்பது இந்துசமயத்தின் அசையாத நம்பிக்கையும் முதிர்வுபெற்ற ஞானிகளின் மேலான கூற்றுமாகும்.

---

நாமார்க்கும் குடியல் . . .

(29ம் பக்க தொடர்ச்சி)

ஊனமொன்றில்லா ஒருவனுக்காட்பட்ட
-உத்தமர்க்கே.

என்று ஐம்பூதங்களும் ஒன்றாய்த் திரண்டு வந்து எதிர்த்தாலும் கூட அஞ்சாத நெஞ்சுத் துணிவு இருந்தது. யமனையே கண்டு அஞ்சாதவர்கள் நவக்கிரகங்களுக்கா பயப்பட்டுவிடுவார்கள்?

## சம்பந்தக் குழந்தை

சின்னஞ்சிறு பாலகனான சம்பந்தக் குழந்தையும் மல்லவா மாசறு திங்கள் கங்கையைத் தன் முடிமேலணிந்தவன் என்னுளமே புகுந்தபடியினால், ஞாயிறு திங்கள், செவ்வாய், புதன், வியாழன் வெள்ளியுடன் சனி பாம்பிரண்டுங்கூட எனக்கு நல்லனவே. நான் அவற்றுக்குப் பயப்படபோவதில்லையென்று முழங்கிற்று. இதனை நாம் ஆணவமென்று கருதிவிடக் கூடாது. அவ்வளவிற்கு அவர்கள் தம் உடல், பொருள், ஆவியனைத்தையும் அவனுக்கு அர்ப்பணித்துவிட்டிருந்தனர்.

துரியோதனது அவைக்களத்தில் திரௌபதி துகிலுரியப்படும்போது தனது மானத்தைக் காக்க தானே போராடிக்கொண்டு கோவிந்தனைக்கூப்பிட்டபோது அவன் வரவில்லை. கையிரண்டையும் மேலே தூக்கிக்கொண்டு தன் செயல் எதுவுமின்றி, முற்று முழுக்க அவனைச் சரண் புகுந்தபோதுதான் அவன் உதவி கிடைத்தது. அதுபோல்தான் ஆழ்வார்களும் நாயன்மார்களும், 'சிவனே நீ மார்க்கண்டேயனைக் காப்பதற்காக, வந்த காலன் தன் ஆருயிர் அதனை வவ்வினாய், அத்தன்மையைக் கண்டு நீ என்னையும் யமன் அடையும்போது இவன் என் அடியவன் தான் என்று யமனை விலக்கிவிடுவாய் என்னும் சிந்தையால் வந்துன் திருவடியடைந்தேன்'' என்று புகலடைந்து விடுகின்றனர்.

இந்திய சுதந்திர தினத்தையொட்டி புதுடில்லி

# சரோஜா வைத்தியநாதன் குழுவினரின் நடன நிகழ்ச்சிகள்



நர்த்தனப் பேரொளி சரோஜா வைத்தியநாதன்


சர்வதேசப் புகழ்பெற்ற நாட்டியக் கலாமணியான திருமதி சரோஜா வைத்தியநாதன் தனது நாட்டிய இசைக் குழுவினரோடு ஆகஸ்ட் மாதம் 14ம் 15ம் திகதிகளில் நடன நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளார். இந்திய சுதந்திர தினமான ஆகஸ்ட் 15 இல் இந்நிகழ்ச்சிகள் இலங்கையில் நடைபெறவுள்ளமை மிகுந்த முக்கியத்துவம் மிக்கதாகும்.

இலங்கையின் இந்தியத் தூதுவராலயம் திருமதி சரோஜா வைத்தியநாதன் குழுவினரின் வருகைக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. இக்குழுவினர் இலங்கையில் இந்திய சுதந்திர தின வைபவங்களைச் சிறப்பிக்கவுள்ளதோடு, இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சின் அனுசரணையோடு நடைபெறும் நாட்டிய நிகழ்ச்சிகளிலும் பங்கேற்க உள்ளனர்.

திருமதி வைத்தியநாதனின் நடன வடிவங்களில் வேதங்கள் தொடர்பான ஆதிசங்கரர் மந்தனமிஷ்ர இருவருக்குமிடையிலான விவாதம் மிகச் சிறப்பானது. இந்நடனத்தைப் பார்வையிட்ட இந்திய ஜனாதிபதி திரு. வெங்கட்ராமன், ''அதியுயர்ந்த திறமையோடு இந்நடனத்தில் பாவங்கள் வெளிப்படுத்தப்பட்டன'' என குழுவினரைப் பாராட்டியுள்ளார்.

இன்னொரு நடன வடிவமான பாரதியின் கனவு உண்மையிலேயே பாரதியின் கற்பனையையும், அவன் காண விளைந்த உலகினையும் முன்னிறுத்துவதாக அமைகின்றன. குழுவினரின் நடன பாவங்கள் பாரதி கவிதைகளுக்கு உயிர் வடிவம் கொடுக்கின்றன. புத்த பெருமானின் வாழ்வில் நடந்த ஒரு அம்சத்தை நாட்டிய வடிவமாக்கி ''கைநிறைய கடுகு விதைகள்'' என அமைத்த நிகழ்ச்சி இந்தியாவிலும், பல நாடுகளிலும் பெருத்த வரவேற்பினைப் பெற்றதாகும்.

திருமதி வைத்தியநாதன், பரதக்கலையில் புதுப் புது முயற்சிகளை மேற்கொண்டு நடனங்களையும் நாட்டிய நாடகங்களையும் உருவாக்கி சர்வதேசப் புகழ்பெற்ற நர்த்தனப் பேரொளி ஆவார்.



சரோஜா வைத்தியநாதனின் நடனக்குழுவினர்

ஆன்மிகம்

# நதியின் பிழையன்று நறும் புனல் இன்மை

ராமனுக்குப் பட்டம் இல்லையென்று தெரிந்ததும் லட்சுமணனுக்கு மிகுந்த கோபம் வருகிறது. ''தேவர்கள், மானுடர்கள், வித்தியாதரர்கள், நாகர்கள், மற்ற யார்தான் வரட்டும், மும்மூர்த்திகளே எதிர்த்து வரட்டும், கைகேயி என்னும் பெண்ணின் எண்ணத்திற்கு நான் இடம் கொடுக்கமாட்டேன்'' என்று சீறுகிறான்.

ராமன் அவனைச் சாந்தப்படுத்துகிறார். ''நதியின் பிழையன்று, நறும் புனல் இன்மை'' என்கிறார். அதாவது ஒரு நதியில் நீர் இல்லையென்றால் அது நதியின் பிழையாகாது என்கிறார். கடைசியில் இது விதியின் பிழை. நீ இதற்கு என்கொல் வெகுண்டது?'' என்று கேட்கிறார். அதாவது ''இந்தக்காரியம் விதியினால் ஏற்பட்டது. நீ கோபித்துக்கொண்டு என்ன பயன்?'' என்று கேட்கிறார்.

ஆனால் லட்சுமணனோ, ''விதிக்கும் விதியாகும் என் வில்தொழில் காண்டி'' என்கிறான். அதாவது, ''என் வில்லாற்றலைக்கொண்டு விதிக்கும் ஒரு முடிவு செய்வேன்'' என்கிறான்.

விதியை எதிர்ப்பேன் என்று சொன்ன இதே லட்சுமணன்தான் பின்னர், ''வெஞ்சின விதியினை வெல்லவல்லவோ''. அதாவது ''விதியை நம்மால் வெல்ல முடியுமா?'' என்று கேட்கிறான்.

மாரீசனின் குரலைக்கேட்டு, ராமனுக்கு ஏதோ ஆபத்து என்று நினைக்கிறாள் சீதை. உடனே லட்சுமணனைப் போய்ப்பார்க்கும்படி கூறுகிறாள். அவனோ, அவளை அக்காட்டில் தனியாகவிடப் பயப்படுகிறான். ராமனுக்கு ஒரு ஆபத்தும் வராது என்று அவளுக்குத் தைரியம் கூறுகிறான்.

ஆனால் சீதையோ, ''நீ போகாவிடில் நான் நெருப்பில் விழுந்து என் உயிரை மாய்த்துக்கொள்வேன்'' என்கிறாள்.

அப்பொழுதுதான் லட்சுமணன், ''உங்கள் கட்டளையை நான் மறுக்கமாட்டேன். இதோ போகின்றேன். வெஞ்சின விதியினை வெல்ல வல்லமோ!'' என்கிறான்.

இதனால் நடந்த விபரீதம் நமக்குத் தெரியும். அதனால்தான் பெரியவர்கள் ''விதி வலிது'' என்று சொல்லுகிறார்கள்.

நன்றி: தினமணி - மதுரை.

# கங்காதரக் கடவுள் வாழ்க!

— சு. நாகரெத்தினம், திருமலை —

நற்றிரு மலையில் நாற்பதா மாண்டில்
பற்றிலான் தாளைப் பற்றுதற்குரிய
சிவயோக மெனும் சீரிய சமாசம்
நவமாய்க் கண்ட நம்குரு மகராஜ்
கங்காதரனார் கலந்தது கண்டே
கங்காதரரைக் கவலையில் ஆழ்ந்தோம்!
நடந்தவை பலவும் நம்மனத் திரையில்
படம் படமாகப் பறந்தே வந்தன!

காடுகள் சுவாமி காலடி பட்டதும்
நாடுகள் ஆகியே நற்பயிர் (வந்ததும்)வளர்ந்ததும்
கல்வியைப் பிள்ளைகள் கற்றுமே ஒழுகி
நல்லவராகியே நட மாடியதும்
கருவிகளுடனே கற்றுமே இசையில்
உருகிடச் செய்தே உள மகிழ்ந்ததுவும்
நெற் பயிர்மூலம் நிறைபணம் தேடி
நற்கலைத் தொண்டு நன்காற்றியதும்

உயர்சிவ நிசியில் ஊர்வலஞ் சென்று
பய பக்தியுடன் பஜனை செய்ததுவும்
கதிரை உகந்தைச் சந்த கோட்டங்கள்
புதிது புதிதாய்ப்போய் வந்ததுவும்
பல மொழிகற்ற பாண்டித்தியமும்
சில மருந்தெல்லாம் செய்த முறையும்
அன்பின் பக்தர் அருகில் வருங்கால்
பண்பாய் அருளும் பக்குவ முறையும்

தேர்ச்சாரதி போல் சிலநாள் அடியேன்
கார் ச்சாரதியாய்க் கடனாற்றியதும்
காட்டு யானையும் கங்காதரரை
நீட்டி வணங்கி நினைந் தேகியதும்!
சின்னச் சாமியை சீடராய்விட்டு
மின்னா இடியாய் மேலிடம் சென்றதும்
படம் படமாகப் பறந்தே வந்தன!
கடந்தவை யாவும் கனவாகிடுமோ?

இன்னும் பலவாம் எவரால் முடியும்
சொன்னால் விடியும் தூயநல் இந்தும்
சிவனார் 'யோக'மும் சிறுசமாசத்தில்
அவமிலா தெழுக' அனைவரும் வளர்க
கங்காதரனார் காண்கவே முத்தி!
எங்களுக் காசி இனிதே அருளுக!
வாழிய சமாஜ வழிபா டென்றும்
வாழிய மலைவாழ் மாந்தர்க ளெல்லாம்!

# கலியுகத்தில் கடவுளின்..

(27ம் பக்க தொடர்ச்சி)

### கலியுகத்தில்

மனிதர் இப்பொழுது சதுர்லித யுகத்தின் கடைசி யுகமாகிய கலியுகத்தின் மத்திய பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

கலியுகத்தில் மனிதருடைய மனம் கணமாத்திரையில் உணர்ச்சி வசப்பட்டுச் சலனமடைவதால் கலியுகமென்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றது.

உணர்ச்சி வசத்தால் அலைமோதிக்கொண்டிருக்கும் மனமுடையவர்கள் எடுத்த எடுப்பில் தியானத்தில் மனதை நிலைநிறுத்தவோ அல்லது கடுமையான நியமங்களோடு கூடிய பிராணாயாம பிரத்தியாகார தாரணைகளின் வழியே குண்டலினி சக்தியை எழுப்பி அனாகத நாதத்தைக் கேட்பதற்கோ அருகதையற்றவர்களாயிருக்கின்றனர்.

அது மாத்திரமல்ல இப்பேர்ப்பட்ட தீர்க்கமான உள்ளப் பயிற்சிக்கு நாள்தோறும் மாறிக்கொண்டிருக்கும் ஜீவிதக் கிரமங்களும், சமுதாயச் சூழ்நிலைகளும் சாதகமாக அமையவும் இல்லை.

ஆகையால் காலதேச வர்த்தமானங்களுக்கு இசையக் கூடிய பஜனை மார்க்கந்தான் கலியுகத்திற்கேற்ற ஆத்ம சாதனை.

ஒளிவு மறைவின்றி அனைவரும் ஒன்று சேர்ந்து இசைச் சுகத்துடன் அப்பியாசித்துக் கடைததேறுவற்குரிய ஒரு உத்தம சாதனம் பஜனை.

### பஜனைக்கு உகந்த இடம் - காலம்

பஜனைக்கு தேர்ந்தெடுக்கும் இடம் மிகத் தூய்மையானதும், தெய்வீக உணர்வுகளை தூண்டிவிடக்கூடிய புனித சின்னங்களால் அலங்கரிக்கப்பட்டதும், காற்றோட்டமும், வெளிச்சமும் உடையதாயிருக்கவும் வேண்டும்.

மனதில் இயற்கையாகவே அமைதியும், சாந்தமும் நிலவக்கூடிய உதயம் அல்லது அஸ்தமன காலம் பஜனைக்கு உகந்த நேரம்.

பஜனையில் கலந்துகொள்ளுகின்றவர்கள் எல்லாம் தூய்மையான மனத்துடன் ஸ்தலத்திற்கு வந்து நிசப்தமாய் அமர்ந்திருத்தல் வேண்டும்.

பஜனை ஆரம்பிக்கும் நேரம் வந்ததும் அனைவரும் எழுந்து நின்று மங்கள இசையுடன் தெய்விகச் சின்னங்களுக்குத் திபாராதனை செய்து குருவணக்கமும், இறைவணக்கமும் முடித்து உடலை நேராக நிமிர்த்தி வைத்து அசைவற்றிருக்கவேண்டும்.

கண்களை முற்றாக மூடியோ அல்லது அரைக் கண் பார்வையுடன் இருப்பதோ மன ஒருமைப் பாட்டிற்கு அனுகூலமாயிருக்கும்.

பஜனைக்கு நாம சங்கீர்த்தனங்கள், நாமாவளிகள் அல்லது ஞான வைராக்கிய உணர்வுகளை ஊட்டக் கூடிய கீதங்களை உபயோகிக்கலாம்.

பாட்டுகளை ஆத்மீக பண்ணிசை முறையில் சுருதி தாள லயத்துடன் பாடவேண்டும்.

இசைச்சுகம் தரக்கூடிய இன்னிசைக் குரலுடைய ஒருவரோ அல்லது இருவரோ பாடிக்கொடுக்க மற்றவர்கள் அதனை ஒருமைப்பாட்டுடன் ஏற்றுப்பாடவேண்டும்.

பாடும்போது பாட்டின் இனிய இராக ஒலியிலும், பாட்டில் அமைந்திருக்கும் கருத்திலும் மனம் முற்றாக லயித்துப்போகுமளவிற்கு ஒருமுக உணர்வுடன் பாடவேண்டும்.

பஜனைக்கு ஒன்று அல்லது ஒன்றரை மணி நேரம் போதுமானது. பஜனை முடிந்தபின் எழுந்து நின்று திபாராதனை செய்து பிரசாதமும் பெற்று அதே சிந்தனையுடன் அவரவர்கள் இடத்திற்குத் திரும்பவேண்டும்.

### வாய்ப்பு அளிக்கவும்

பஜனை நாட்களில் சாத்விகமான உணவைக் குறைந்த அளவில் உட்கொள்ளுவதால் கூடுதலான பலன் உண்டு.

பஜனையின்போது இறுக்கமில்லாத தூய உடைகளையே அணியவேண்டும்.

பஜனையில் கலந்துகொள்பவர்கள் எல்லாம் கூட்டுறவுக் குடும்ப போகத்துடன் ஐக்கியமாகியும், அன்பாயும் அன்னியோன்னிய உபகாரம் உடையவர்களாயும் இருக்கவேண்டும். பஜனையில் ஆர்வமும் பக்தியும் இருப்பவர்களுக்கு யாதொரு அங்கத்துவ நிபந்தனையுமில்லாமல் சுதந்திரமாய் அதில் கலந்துகொள்ளும் வாய்ப்புகள் அளிக்கவேண்டும்.

பஜனை முடிவில் இதுவரையில் தேங்கிநின்ற மனக்கிலேசங்களுக்கு சமனம் வந்திருப்பது போன்ற மனத்திருப்தியும் சொல்ல முடியாததவொரு உட்சுகமும் சாந்தியும் கிடைத்திருப்பதுபோன்ற அனுபவமும் இருக்குமேயாகில் பஜனையில் நற்பயன் அடைந்து வருவதாக அனுமானிக்கலாம்.

நாளடைவில் பஜனையில் நின்று உருவாகும் மனாதீத சக்திகள் பக்தர்களுடைய வாழ்க்கையில் எல்லாப் பாங்கிலும் நின்று அருள்பாலித்துக்கொண்டிருப்பதைப் பிரத்தியட்சமாக அறியலாம்.

இறுதியில் பஜனையும், பஜனையில் அடங்கிய கருத்தும், பூஜிக்கின்றவனும் ஒன்றுகலந்து ஏகபாவத்தில் வரும்பொழுது அனாகதத் தொனியின் சித்தி விசேஷங்கள் அனுபூதி மயமாய்த் திரும்.

கலிகால உபாதையால் நொந்துருகி நிற்கும் மனம் நாம பஜனையின் திவ்விய சக்தியால் அனாகத நாத வெளியிலிருந்து வருசிக்கும்.

நாதாமிர்த துளிகைகளால் குளிர்மைப்படும்பொழுது தங்கவிக்கிரகத்தில் சார்த்திய பட்டுப்பீதாம்பரம் போன்று தளர்ந்த ஜீவிதம் தேஜோமயமாய் மிளிரும்.

நன்றி: மில்க்வைற் இலவச வெளியீடு.

# திருக்கோணமலையில் சமாதிலிங்கப் பிரதிஷ்டை

திருக்கோணமலையில், பிரதான வீதியில் அமைந்துள்ள சிவயோக சமாஜத்தில் ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா அவர்களின் அஸ்தி சமாதியின் மீது கடந்த 6ம், 7ம் திகதிகளில் சமாதிலிங்கப் பிரதிஷ்டை வெகு சிறப்பாக இடம் பெற்றது.

முதல்நாள் வியாழனன்று காலை கணபதி ஹோமம் நவக்கிரக ஹோமம், வாஸ்துசாந்தி ஆகிய கிரியைகள் இடம் பெற்றன. அன்று பிற்பகல் த அமரசிங்கம் குழுவினரின் வில்லுப்பாட்டினைத் தொடர்ந்து இரவு கும்பஸ்தாபனம், பூஜை, ஹோமம் என்பன இடம்பெற்றன.

மறுநாள் வெள்ளியன்று தீபஸ்தாபனம், லிங்கஸ்தாபனம், அஷ்டபந்தனம், எண்ணெய்க்காப்பு ஆகிய கிரியைகளின் பின்னர் கும்பத்திற்கு குடமுழுக்கு இடம்பெற்றது. அன்று மாலை சமாஜ பக்தர்களின் விஷேட பஜனைகளும், சிவயோகச் செல்வன் த. சாம்பசிவத்தின் சுவாமி 'காட்டிய வழிநெறி' என்ற சுதாப்பிரசங்கமும் இடம்பெற்றன.

கொழும்பு கப்பித்தாவத்தை ஆலய சிவாச்சாரியரான பிரம்ம ஸ்ரீ இராதாகிருஷ்ண குருக்கள், கைலாசநாதர் ஆலய இராமச்சந்திரக் குருக்கள், திருக்கோணமலை மாரியம்மன் ஆலய பிரம்ம ஸ்ரீ சண்முகரத்தின சர்மா, உவர்மலை ஆலயக் குரு பிரம்ம ஸ்ரீ பத்மநாப ஐயர் ஆகியோர் லிங்க பிரதிஷ்டை கிரியைகளை சிறப்புற நடத்துவித்தனர்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சுவாமிகளின் ஆசிகளோடு இந்தியாவிலிருந்து சுவாமி உமாசங்கர் அவர்களால் கொண்டுவரப்பட்ட லிங்கமே சிவயோக சமாஜத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ஹோமம், யாகம், கும்பாபிஷேகம் ஆகிய கிரியைகளில் சுவாமி கங்காதரானந்தா அவர்களின் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

---

## இராமகான சபாவின் பொன்விழா

கொழும்பு இராமகான சபாவினரின் பொன் விழா இராமபிரான் பிறந்த இராமநவமி தினத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடினார்கள்

சபாவின் இந்த பெருமை மிக்க தினத்தை கடந்த 24-3-91 ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் "கதம்பமாலை" என்ற இசை நடன, நாடக கலை நிகழ்ச்சியுடன் மக்களை பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினார்கள். மாண்புமிகு, இந்து சமய தமிழ் கலாசார அமைச்சர் உயர்திரு P. P. தேவராஜ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவிற்கு மேலும் மெருகு ஊட்டினார்கள்.

கணக்காளர்கள், வைத்தியர்கள், பேராசிரியர்கள், வித்வான்கள், கலைஞர்கள் போன்ற பலரை உறுப்பினர்களாகக் கொண்ட, உன்னத நோக்கத்துடன் செயல் படத்துடித்துக் கொண்டு இருக்கும் கொழும்பு இராமகானசபா வினருக்கு எமது வாழ்த்துக்கள்.

நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றிதீருமே
இம்மையே இராம என்ற இரண்டு எழுத்தினால்


— ஆர். வைத்திமாநிதி



செல்வி பிரியதர்ஷனி சதாசிவத்தின் அபிநயத் தோற்றம்

# அக்னி ஹோத்ரம் - யாகமும் மகிமைகளும்

**இந்தியாவின் மகாராஸ்டிர மாநிலத்தைச்சார்ந்த அரசியல் துறைப் பேராசிரியரான திரு. மூலே அவர்கள் தற்போது நாட்டின் பல பாகங்களிலும் 'அக்னி ஹோத்ரம்' யாகம் பற்றிய விளக்கங்களைச் செய்து வருகிறார். அவரிடம் பெற்ற தொகுப்பு கீழே தரப்படுகிறது.**



பேராசிரியர் மூலே

அக்னிஹோத்ரம் என்ற எளிய யாகமுறை எமது வேதங்களிலிருந்து பெறப்பட்டது. எமது காலத்தில், மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த கஜாளன மஹராஜ் என்ற மகாஞானி இதனை இன்றைய உலகிற்கு அறிமுகம் செய்தார். 1972 இலிருந்து அமெரிக்காவிலும், 1974 இலிருந்து ஜேர்மனியிலும் அக்னி ஹோத்ரம் பற்றிய பிரசாரங்கள் மேற்கொள்ளப் படுகின்றன. இந்த யோக முறை தனி ஒவ்வொருவராலும் ஆற்றப்பட வேண்டியது. எனவே நிறுவன ரீதியான எந்த அமைப்பும் இல்லை. யாகமுறை பற்றி அறிய விரும்பும் ஒவ்வொருவருக்கும் இது விளக்கப்படுகின்றது.

அக்னிஹோத்ரம் செய்வதற்கு ஒரு நாளில், சூரியன் உதிக்கும், மறையும் பொழுதுகளில், சில நிமிடங்கள் மட்டுமே தேவை.

அக்னிஹோத்ர யாகம் செய்பவரின் மனமும்' உடலும் மிகவும் தூய்மையடைகின்றன. யாகசக்தி சூழலுக்கும் பரவி, சூழலில் உள்ளோர் அனைவரும் மன அமைதி பெறுகின்றனர்.

இலங்கை மிகவும் புண்ணியபூமி இங்கு ஆயிரக் கணக்கானோர் நீண்டகாலம் தவமியற்றி உள்ளனர். அவர்களது தவசக்தி இன்றும் இலங்கையின் நாகதீபம், கதிர்காமம், திருகோணமலை, முன்னேஸ்வரம் ஆகிய இடங்களில் நிறைந்து இருக்கிறது. எனவே இலங்கையின் எந்த இடத்தில் அக்னிஹோத்ரம் செய்யப்பட்டாலும், அந்த சூழலே தெய்வீகமும், அமைதியும் மிக்கதாக மாறும்.

இன்று மனிதர்களின் எண்ணங்களும், செயல்களும் தூய்மையற்று, தீமையுற்றிருப்பதனால் இத்தனை துன்பங்கள் மிகுந்திருக்கின்றன. எனவே தனியொருவரின் மனமும், சூழலும் தூய்மையாவதற்கு இந்த அக்னிஹோத்ரம் பெரிதும் உதவும்.

**பேட்டி- பண்டாரவளை அன்புச் செல்வன்**

அக்னிஹோத்ரத்தினால் விளையும் பலன்கள் அற்புதமானவை. ஜபம், தியானம் போன்றவை, செய்பவருக்கு மட்டுமே உதவக்கூடும். ஆனால், இந்த யாகப் புகையும், மந்திர உச்சாடனமும் செய்யும் சூழலையே மாற்றி அமைக்கின்றன. தம்மை அறியாமல் சூழலில் உள்ளோரின் மனங்கள் மாறிவிடுகின்றன.

அக்னிஹோத்ரப் புகை காற்று மண்டலத்தில் கலப்பதால், காற்றிலுள்ள நோய்க்கிருமிகள், பூச்சிகள் என்பன நாசமாகின்றன. இதன் சாம்பல் உடலில் பூசப்பட்டால் சர்மநோய்கள் வியக்கத்தக்க அளவில் மாறிவிடுகின்றன.

அக்னிஹோத்ரத்தில் காயவைத்த சாணத்துண்டுகள் எரிப்பதற்கு பயன்படுகின்றன. சாணம் மிகவும் மருத்துவ குணமுடையது என நவீன விஞ்ஞானமும் ஒப்புக்கொள்கிறது. இதன் சாம்பல் மனிதர்களுக்கு மட்டுமன்றி, தாவரங்களுக்கும் உரமாக பயன்படுத்தப்படுகிறது. சிறிதளவு உரம் காற்றிலே விசிறப்பட்டதும் அந்தப் பகுதியிலுள்ள தாவரங்கள் செழித்து வளர்வதோடு அதிகளவு பலனையும் தந்துள்ளன. அத்துடன் இரசாயன உரங்கள் கலக்கப்படாத இடங்களில் பெறப்பட்ட தாவரங்களின் பழம், காய் என்பன மிகவும் சுவையுடையதாய், இருந்தன.

தற்போது ஒஸ்டிரியா, போலன்ட் போன்ற நாடுகளில் இந்த சாம்பலை பயன்படுத்தி பண்ணை

(தொடர்ச்சி 38ம் பக்க)

## சங்கப்புலவர் கனகரத்தினத்தின்

# சிறுவர் பாடல்

சங்கப்புலவர் எனப் புகழ்பெற்ற, மயிலங் கூடல் த. கனகரத்தினம் அவர்களின் 'சிறுவர் பாடல்' கவிதைத் தொகுப்பு ஜூன் மாதம் 2ம் திகதி வெள்ள வத்தை தமிழ்ச்சங்க மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.



கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற 'சிறுவர் பாடல்' நூல் வெளியீட்டு விழாவில் அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களிடமிருந்து திரு. டி. செந்தில் வேள் முதல் பிரதியை பெறுகிறார்.

இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ், கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பீடத் தலைவர் பேராசிரியர் எஸ். சந்திர சேகரன், தினகரன் பிரதம ஆசிரியர் திரு. ஆர். சிவ குருநாதன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் திரு. என். சிவராஜா, கொட்டகலை ஸ்ரீபாத கல்லூரி கலாநிதி சிரோன் மணி இராஜரத்தினம், யாழ் பல்கலைக்கழக முது நிலை விரிவுரையாளர் கலாநிதி எம். ஏ நுஃமான், கொழும்பு விவேகானந்த வித்தியாலய அதிபர் திரு. எஸ். தில்லைநாதன் ஆகியோர் வெளியீட்டு நிகழ்ச்சி களிற் கலந்து சிறப்பித்தனர்.

எடுத்த எடுப்பிலேயே பல வண்ணம் நிறைந்த அட்டைப்படம் மூலம் மனதைக் கவர்ந்துவிடுகின்ற நூல் இது. ஒரு அன்னை தனது மழலைக்கு அழகு காட்டுவதையும் ஒரு சிறுவனும், சிறுமியும், மலை யும், மலரும், யானையும், பறவைகளும், முயலும் பூனையும் நிறைந்த இயற்கைச் சூழலிலே உரையாடு வதையும் காணுகின்றபோதே நூலைப் படைத்த ஆசிரியரின் எண்ணப் போக்கினை நன்குணர முடிகி றது அட்டையின் வண்ணமும், வடிவமும் நூலுக்கு அணி சேர்க்கின்றன.

நூலை விரித்தவுடனேயே, இன்னொரு மழலை யின் புகைப்படம் தெரிகிறது. கனவுகாணும் கண் கள். கிள்ளிமகிழவேண்டிய கன்னம். எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்கொள்கின்ற சிறுசோ?

உள்ளே தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு. க. கந்த சுவாமி அவர்களின் பதிப்புரையும் சங்கத் தலைவர் செ. குணரத்தினம் அவர்களின் அணிந்துரையும் இடம்பெற்றுள்ளன

தொடர்ந்துள்ள கவிதைகள் இருபத்து நான்கு தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன. தலைப்பிற்கேற்ற அழகிய படங்கள் ஒவ்வொரு பக்கத்திலும் சிறுவர் கள் நோக்கில் வரையப்பட்டுள்ளன.

கவிதைகளை நன்கு வாசிக்கும்போது புலமை யும், குழந்தைகளின் மனத்தத்துவங்களும் நிறைந்த ஆசிரியரின் கவிதை ஆற்றல் நன்கு புலப்படுகிறது. சிறிய மனங்களில் ஓடும் எண்ணங்களுக்கேற்ப எளிய சொற்களில் பாடல்கள் அமைந்துள்ளன.

**அன்புச் செல்வன்**

இவற்றில் காணக்கூடிய புதுமை என்னவெனில், நவீன தலைப்புகளில் பாடங்களை அமைத்துள்ளமை தான். உதாரணமாக, சூழல் மாசுபடல், மரம் நாட்டல், சாரணீயம், தாய்ப்பால் வீதி ஒழுங்கு போன்றவையும் இளம் மனங்களில் நன்கு பதிய வேண்டும் என்ற நோக்குடன் ஆசிரியர் பாடியுள் ளமை போற்றத்தக்கது.

இன்றைய வேகமான விஞ்ஞான யுகத்தில், 'கை வீசம்மா கைவீசு' என்று எத்தனை நாள் தான் சொல்லிக்கொண்டிருப்பது?

ஒவ்வொரு பாடலிலும், எளிமையும் இசையும் கலந்தே வருகின்றன. சிறுவர்கள் வாசிக்கும்போதே தாளம்போடக் கூடியவாறு வார்த்தைகள் அமைந் துள்ளன.

குறிப்பாக முயலும் வந்தது எனும் பாடலில்

கரிய வெள்ளைக் குட்டி முயல்
பாய்ந்து வந்தது.
நறுக்கி நறுக்கி நன்றாய்க் கீரை
நன்னித் தின்றது.

என்ற வரிகளை நாம் உதாரணம் காட்டலாம். உயர்ந்த கருத்துகளும் இலகுவாக ஊட்டப்பட்டு விடுகின்றன. மாவலி கங்கை எனும் பாடலில்,

தங்கமின் சக்தியும் தான் தருவாள் - இங்கு
தொங்கிடும் மின்விளக்கு ஏற்றிடுவோம்

(தொடர்ச்சி 38 ம் பக்கம்)

# இசையும் இறைவனும்

— இரா. நீதிராஜ சர்மா —

உயிர்கள் உய்யும் பொருட்டு உலகத்தில் சிருஷ்டி, திதி, சம்கார, துரோபவ, அனுக்கிரக என்கின்ற பஞ்ச கிருத்தியங்களை செய்வதற்காக அனந்த தாண்டவமாடும் இறைவனின் அங்க பாவங்களின் தோற்றத்தை உற்றுநோக்கினால், அது ஓம் என்ற பிரணவ வடிவத்தை பிரதிபலிக்கிறது. எனவே இறைவன் இசைவடிவானவன். இசையே இறைவன்.

உலக சிருஷ்டியே ஒலியில் தான் உண்டானது. அதாவது நாதத்திற்கு உலகினிலே ஓசைமட்டும் இல்லாவிட்டால் எல்லாமே நிசப்தம் ஆகிவிடும். எனவே உலகம் இயங்குவதற்கும் ஓசை அவசியம் என்பது புலனாகின்ற அதேவேளையில் இறைவன் இசைவடிவாக இருந்து உலகத்தை இயக்குகிறான் என்பதும் தெளிவாகின்றதல்லவா!



இறைபுகழ் பாடும் நீதிராஜ சர்மா

ஓம் என்ற ஓசையை மென்மையாக இனிய குரலில் ஓதும்போது, மனம்பொறி வழிப்போகாது, பொறி மனம் வழி வந்து, மனப்பக்குவம் வளர, மன ஒருநிலைப்பாடு ஏற்பட, ஆசை அற்றநிலை தூண்டப்பட, உலக மாயையில் இருந்து தாண்டப் பெற, இறைவன் திருவடியை நாடிச் செல்கிறோம். ஓம் என்ற நாத ஒலி எவ்வளவு சக்திமிக்கது என்பதை அறிகின்றோமல்லவா?

எனவே தான் இறைவனை அடைந்திடவே முன்னோர்கள் இசையே சிறந்ததென சொன்னார்கள். எமது இந்து மதத்தின் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களில் சாமம் என்கின்ற வேதம் இசைவடிவாகவே அமைந்துள்ளது. 'சாம வேதகீத நாதன்' என்று இறைவனுக்கு ஓர் பெயரும் இதனால்தான் ஏற்பட்டது. பலமொழிகளினாலே, இறைவனுடைய புகழை ஸ்தோத்திரமாம வகுத்து, இசைவடிவமாக சாம வேதம் அமைக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக எமது தமிழ் வேதமாகிய இறைவன் புகழ் கூறும் திருமுறைகள் எமது நாயன்மார்களினால் இசைவடிவமாக இறைவன் முன் பாடப்பட்டவைகள். ஞானப்பால் உண்ட ஞானசம்பந்தர் இசை ஞானப்பால் உண்ட கணமே, தோடுடைய செவியன் விடையேறியோன் என்று. அன்று தேவார இசை பாடி இறைவன் உருவத்தையே எங்கள் முன் கொண்டுவந்தார்.

எமது சமய குரவர்கள் இசையோடு இறைவன் புகழ்பாடி இறைவனை இசையவைத்து, அவன் மனம் நெகிழவைத்து, அவன் அருள் பெற்று இறைபாதம் அடைந்தவர்கள் என்பதை நாம் அறியமாட்டோமா? எந்த மொழிக்கும் இசை பொதுவானது. வெறும் வார்த்தைகளை வசனமாக எழுதி வாசிப்பதிலும் அதற்கு இசைவடிவம் கொடுத்து இனிமையாக பாடுவது அதற்கு உயிர் கொடுத்து உலவவிடுவது போல் இல்லையா?

எனவே இறைவனுடைய அருட்பாடல்களை இசையோடு, பொருள் உணர்ந்து பாடும்போது தெய்வீக உணர்வு எம்மில் பளிச்சிடுகிறது. தெய்வீக உணர்வு எம்மை பக்திவலையில் சிக்கவைக்கிறது. பக்திவழி எம்மை முக்தி நெறிக்கு எடுத்து செல்கிறது. எனவே இறைவனை அடைவதற்கு இசை சிறந்ததொரு வழியாகிறது:

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரை; முருகப் பெருமான் நாவில் வேலூன்றி நீபாடு; நீ பாடு என்று சொல்லி ''முத்தை தருபத்தி'' என அடியெடுத்துக் கொடுத்து, தமிழ்வளர்க்க, இறைபுகழ் பரப்ப இசைவரம் கொடுத்தார். அதுமட்டுமல்லாது சகல பலமும் பொருந்திய இராவணன் கைலை மலையின் கீழ் சிக்குண்டபோது, மீள வழியில்லாது, ஈசனை இசையால் மட்டும்தான் நெகிழவைக்கலாம் என்று உணர்ந்த அவன் யாழ்மீட்டி இசைபாடி இறைவனை உருகவைத்து அருள் பெற்றான்.

(தொடர்ச்சி 39ம் பக்கம்)

# இந்து கலாசாரத்தின் இனிய வாழ்த்துக்கள்



மோகன சுந்தரம்—தவமணிதேவி

சோவியத் நாடு தந்த கல்வியால்,
மேவிடும் பணிகள் மேன்மை சிறக்க,
இந்து அமைச்சரின் அலுவல்கள் தம்மை
உந்தும் உவகையோடாற்றிய தேவீ !!
பெற்ற மண்ணின் பெருமை நிலைக்க
உற்றார் உறவோர் உள்ளங் களிக்க
இன்மனங் கொண்ட மோகனோடு
நன்மணம் பூண்டாய் நலங்கள் பெறுக !!
வாழிய நீவிர், வாழ்க நலமுடன்
நாளையப் பொழுதெலாம் நன்மைகள் நிறைந்த
ஒரு மனதோராய் இன்பங் கண்டு
திருவுற வாழ்க ! வாழ்க பல்லாண்டு !!

## அக்னி ஹோத்ரம் . . .

(35ம் பக்க தொடர்ச்சி)

களில் அதிக விளைச்சல்களைப் பெறுகிறார்கள். இயற்கையோடு ஒத்த அதிக பலனும் பெறப்படுகின்றது.

அக்னிஹோத்ரம் செய்யும் சூழலில் இருந்த பசுக்கள் அதிகளவு பாலைச் சுரந்தமை கண்டு ஜேர்மன் நாட்டு விஞ்ஞானிகள் வியப்புற்றனர்.

எனவே நாம் எமது மனங்களையும், சூழலையும் மிக இலகுவில் மாற்றி அமைக்க இந்த யாகம் பெரிதும் பயன்படுகிறது. இதனை இலங்கையில் பெருமளவு மக்கள் கடைபிடித்தால், இந்த நாடு அமைதியும், சுபிட்சமும் மிக்கதாக மாறும்.

இது எந்த மதத்திற்கும் சொந்தமானதல்ல. யாரும் இதனை மேற்கொள்ளலாம். எமது முன்னோர்களின் பாவச்செயல்களினாலேயே இன்றைய உலகம் அமைதியற்று துன்பம் நிறைந்திருக்கிறது. உயிர்க்கொலைகளும், மிருகபலிகளும் நிறைய நடந்துவிட்டன. அவற்றின் விளைவுகளை நாம் மட்டுமன்றி எமது அடுத்த தலைமுறைகளும் அநுபவித்தாக வேண்டும்.

எனவே இந்த எளிய அக்னிஹோத்ரம் மூலம் நாம் அனைவரும் பயன் பெறலாம். ஒரு நாளில் சில நிமிடங்கள் மட்டுமே போதும்.

(அக்னிஹோத்ரம் பற்றிய விளக்கங்களையும், செயல்முறைகளையும் ஸ்ரீ முத்துகிருஷ்ண சுவாமி ட்ரஸ்ட், 103, ஹல்ட்ஸ்டோவ் வீதி, கொழும்பு-12 எனும் முகவரிக்கு எழுதி அறியலாம் என பேராசிரியர் மூலே அறிவிக்கிறார்).

---

## சங்கப்புலவர் கனக . . .

(36ம் பக்க தொடர்ச்சி)

என்று மாவலி எமக்கு மின்சக்தியைத் தருவதையும் சின்ன மனங்களில் பதித்துவிடுகிறார் புலவர்.

ஒவ்வொரு பாடலும் சிறுவர்களின் மனங்களை நன்கு கவரக்கூடிய விதத்தில் அமைந்துள்ளன. இறுதிப்பாடல் கவிதை நாடகமாக அமைந்துள்ளது. வேடன், கலைமான், ஆமை, மரங்கொத்தி ஆகிய பாத்திரங்கள் இந்நாடகத்தில் இடம்பெறுகின்றன.

மொத்தத்தில், பலமொழிப் புலமையும், ஆசிரிய அநுபவமும், உளவியல் அறிவும், கவித்துவ வளமும் நிறைந்த புலவர் கனகரத்தினம் அவர்களின் இந் நூல் எல்லாச் சிறுவர்கள் கைகளிலும் திகழ பெற்றோர்கள் கவனங்கொள்வார்களாக.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற் பெற்ற வெளியீட்டு அநுபவங்களும், பாட நூல்களிற் கொண்ட பரிச்சயமும், புலவர் இந்நூலை சிறந்த முறையில் அமைக்க காரணமாயிருந்திருக்கின்றன.

புதிய பொலிவுடன் திகழும் இந்நூலின் பதிப்பிலும் வெளியீட்டிலும் பங்குகொண்ட அனைவருக்கும் எமது பாராட்டுகள்!

இங்கிலாந்தில் இந்து கலாசாரம்
கிடைக்குமிடம்:

**No. 11, DURLEY AVENUE,**
**PINNER, MIDDLESEX HA5, 1JQ**
**UNITED KINGDOM**

## இசையும் இறைவனும்

(37ம் பக்க தொடர்ச்சி)

தெய்வீக தன்மை கொண்ட இசையின் வடிவத்திலேயே இறைவன் துதிப்பாடல்கள் எல்லாம் அமைந்திருக்கிறது. இத்தனை சக்திவாய்ந்த இசையின் பெருமையை பண்ணுலக மக்கள் நன்கு முறைப்படி கற்று இறைவன் துதிகளை பாடுவதற்கேற்ற வகையில் தியாகராஜ சுவாமிகள் அவதரித்து கர்நாடக சங்கீதத்துக்கு உயிர்கொடுத்து இறைவன் புகழ் பாடும் கீர்த்தனைகளை, பாடியருளினார். அவர் அன்று காட்டிய சாஸ்திரீக சங்கீதமும் அன்று பாடிய கீர்த்தனைகளும் இன்று எமக்கு இசைவழி சென்று இறைவழி காண நல்வழி காட்டுகிறது.

எனவே எமது முன்னோர்கள் எமக்கு சொல்லிய கருத்துக்களையும், காட்டிய வழிகளையும் கடைப்பிடித்து, இசையால் இறைபுகழ் பாடி, இறைவனை வசமாக்கி, இப்பூலோக வாழ்வின் நற்பயன்களை அனுபவித்து இறைவன் திருவருள்பெற்று உய்வோமாக.

## சந்தா விபரம்

1991ம் ஆண்டு தைத் திங்கள் முதல் இந்து கலாசார இந்து சமய திங்கள் இதழின் சந்தா விபரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. | 75.00 |
| ஆயுள் சந்தா | ரூ. | 1000.00 |
| தனிப்பிரதி | ரூ. | 5.00 |

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

— திருவாகி
இந்து கலாசார மன்றம்,
39/23, நெல்சன் ஒழுங்கை
கொழும்பு-3.

*With Best Compliments*

*of*

**Black & White Pharmacy (Pvt) Ltd.**

No. 63 BANKSHALL STREET,
COLOMBO-11

Telephone : 433199

காயத்ரி பற்றி இதுவரை படித்திராத கேட்டிராத

# ஸ்ரீ காயத்ரி சித்தரின்

அரும் ஞான பொக்கிஷ நூல்கள்

- காயத்ரி மந்திர மகிமை
- காயத்ரி ராமாயணம்
- காயத்ரி கீதை
- காயத்ரி மூலம் குண்டலின் விழிப்பு
- காயத்ரி தியானம்
- ஞான குரு
- மனித உடலில் தெய்வஞானம்
- 'அருள் ஒளி' (காலாண்டு சஞ்சிகை)

கிடைக்குமிடம்;

**SRI GAYATHRI PEETAM**
**"SRI NAGAR"**
**82, LADY McCALLUMS DRIVE**
**NUWARA ELIYA**
**SRI LANKA**

Phone: 052-2609

With Best Compliments

of

# PIO

## PHARMACY GROCERS

## &

## BOOK SHOP

149, Jampettah Street, Colombo 13.

with Best Compliments

of

**Statemens Enterprises**

*Importers & Exporters*

**Dealers in Hardware, Tools, Sanitaryware and Plumbing Fixtures, Etc.**

Cable: VELANAN, Telex: 21835, 21897, 21467 TXBURO CE
Attn. SE-SOUN

***22-2/9, Quarry Road, Colombo 12***

TELE: 447723 - 23170

With Best Compliments

of

**SHINY TRADERS**

Manufacturers of Paper Cups, Paper Plates Flat Files, C. R. Books Exercise Books Monitor's Exercise Books & Stationery Items.

*64, Peer Saibo Street,*
*Colombo- 12*

***Office: 435556***
***Res: 685143***

*With Best Compliments*

*of*

V

# Peoples Trades & Supplies

NO. 112, 4TH CROSS STREET,

COLOMBO - 11.

T'PHONE : 23509

*With Best Compliments*

*of*

# SAMPATH TRADERS

**191, 5th Cross Street, COLOMBO - 11.**

*T'Phone: 24950*

# No Home is Complete Without A..................................

## 'SUPREME'

## Quarts Wall Clock

V

# Eswaran Brothers

No. 267, SEA STREET,

COLOMBO - 11.

T'PHONE : 432559 - 547608 - 435842

BRANCHES
Unity Plaza,
Bambalapitya.
Tel: 581479

Pearlazzo Building,
Dehiwala,
Tel: 712066

with Best Compliments

of

# WESTERN TRADERS

SPECIALIST IN ALL KINDS OF BOLTS & NUTS, METRIC BOLTS, CRANK BOLTS, EYE BOLTS ETC. DEALERS IN HARDWARE & IMPORTERS.

**334, Old Moor Street, *Colombo 12.***

***Tel:*** **434288**

**With Best Compliments**

of

# MAIYURA TEXTILES

WHOLESALE & RETAIL DEALERS IN TEXTILES

**149, KEYZER STREET,** *Colombo - 11*

PHONE: 24060

*With Best Compliments*

*of*

V

# Thulashi Trade Centre

30, FOURTH CROSS STREET,

COLOMBO - 11.

T'PHONE : 422537

*With Best Compliments*

*of*

**WELL WISHER**

*With Best Compliments*

*of*

# Kotahena Pharmmacy

DISPENSING CHEMISTS, DRUGGISTS & GROCERS

79, BONJEAN ROAD,

COLOMBO - 13.

T'PHONE : 432022

with Best Compliments

of

# Nisaan Printers

OFFSET & LETTER PRESS GENERAL PRINTERS,
STATIONERS & PUBLISHERS

**64-N, Peer Saibo Street, Colombo 12.**

**Tel: 435556**

With Best Complimens

of

# KEERTHI STATIONERS

DEALERS IN PAPER & STATIONERY SPECIALIST IN PACKING MATERIALS &
PHOTOCOPY PAPER

*12, Keerthi Lane* [Off Maliban Street]

*Colombo - 11*

*With Best Compliments*

*of*

*Mr. & Mrs N. Yogasundaram*

*With Best Compliments*

*of*

A WELL WISHER

*Best Compliments*

*of*

RIKEN TIRE

# Jailaxmi Stores

HEAD OFFICE
91-A Maliban Street, Colombo 11
Telephone: 26149, 541329.
Cable : " JAYEXPORT "
Telex 22744 JLS CE.
Fax 587240.

BRANCH
153, Union Place.
Colombo 2.
TEL 548547, 547741

கஜெட் இல. 7. 6. 1968


*With Best Compliments*

*of*

# RENUKA INDUSTRIES

**IMPORTERS & EXPORTERS**

MANUFACTURERS IN ALL KINDS OF

## ALUMINIUM WARES

**170 - 172 OLD MOOR STREET, COLOMBO - 12**

Telephone : 4 3 5 5 7 9


**Printed by OSKHA ENTERPRISES, 149-B, Jampettah Street, Colombo - 12.**